கடவுள் துணை.

ஸன்மார்க்க ப்ரதர்சினீ.

தமிழ் மாதாந்திரப் பத்திரிகை.

श्रीकान्तो मातुलो यस्य जननी सर्वमङ्गला।
जनकः शङ्करो देवः तं वन्दे कुञ्जराननम्॥

மாலை 1.	மதுரை 1934-ஆம் ஏப்ரல்-மீ 1-உ	மலர் 8.

பொருளடக்கம்.

ஆசிரியர்:—

சாஸ்த்ர ரத்னம், ப்ரம்மஸ்ரீ தேதியூர்

ஸுப்ரமண்ய சாஸ்த்ரியவர்கள்,

மதுரை.

ஸ்ரீமத் பகவத் கீதை.

முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.



முன் உபதேசத்தில்,
ஜன்மாவோ, மரணமோ இந்த இரண்டு
களும் தேஹத்தின் தர்மமாகத்தான்
ஆகும், ஆத்மாவினுடைய தர்மமாக
ஆகாது. தேஹத்திற்கும், ஆத்மாவுக்
கும் வேறு என்ற விவேகமில்லாத
காரணத்தினால், தேஹத்தின் தர்ம
மாகிய பிறப்பு, இறப்பு முதலானது
களை ஆத்மாவினிடத்தில் கல்பித்துக்
கொண்டு, ஆத்மாவையே பிறந்தது போலவும், இறந்தது போலவும்,
வ்யவஹாரம் செய்கிறார்களே தவிர, உண்மையில் ஜன்மமரணம்
முதலானவை, ஆத்மாவின் தர்மமாக ஆகாது. ஆகையால் ஆத்மா
அசோச்யமான பொருள் என்பதில் எந்த வாதிகளுக்கும் ஆக்ஷே
பணையே இராது. இவ்விதமிருக்கும் போது துக்கத்திற்கு விஷய
மாகாததான பீஷ்மர் முதலானவர்களுடைய ஆத்மாக்களைக் குறித்து

அர்ஜுனன் துக்கப்படுவது ந்யாயமாகவே ஆகாது, என்று பகவானுன ஸ்ரீகிருஷ்ணனுல் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. அது சரியே.

ஆகிலும் ஜன்ம மரண நிமித்தமாக பீஷ்மர் முதலானவர்களுடைய ஆத்மாக்கள் "சோச்யமாக" (துக்கத்திற்கு விஷயங்களாக) ஆகாத போனுலும், போர் செய்யும் காலத்தில், அர்ஜுனனுல் அஸ்த்ர சஸ்த்ரங்கள் முதலான ஆயுதங்களை பீஷ்மர் முதலானவர்களுடைய சரீரங்களில் ப்ரயோகம் செய்யப்படும் காலத்தில், ஆயுதங்களுடைய ப்ரஹாரங்களினுல் (அடிகளால்) ஏற்படும் வ்யதையாகிய (துன்பம்) துக்கமானது ஜடமான சரீரத்திற்குத்தான் என்று சொல்ல முடியுமா? ஸுகம் துக்கம் எல்லாம் சேதனத்தின் தர்மமாகத்தானே காணப்படுகிறது. அசேதனமான ஒரு தூண் துக்கத்தை யனுபவிக்கிறது என்று சொன்னுல் யாராவது நம்புவார்களா? ஆகையால், பீஷ்மர் முதலான மஹான்களுடைய ஆத்மாக்கள் மரித்துவிடுமோ என்று எண்ணுவதற்கு இடமில்லாத போனுலும், அவர்களுடைய சரீரங்களில் பாணங்கள் விழும்போது, அவர்களுடைய ஆத்மாவுக்கு துக்கம் ஏற்படத்தானே ஏற்படவேண்டும். அவ்விதமான ஒரு துக்கத்தை மஹான்களுக்கு உண்டுபண்ணுவதில், அர்ஜுனன், தான் அதற்கு கர்த்தாவாக இருப்பதில் இஷ்டமில்லாமல் தான், "நான் போர் செய்ய மாட்டேன்" என்று பகவானிடத்தில் சொன்னதாக வைத்துக்கொண்டு, அர்ஜுனனுடைய பக்ஷத்தை பரம ஸித்தாந்தமாக ஏன் அங்கீகரித்துக் கொள்ளக் கூடாது என்று சிலர்கள் வாதம் செய்வார்கள்.

ஆத்மநாச ஸம்பந்தமான துக்கத்திற்கு அவகாச மில்லாத போனுலும், கடூரமான அஸ்த்ர சஸ்த்ரங்களுடைய அடிகளால் ஏற்படும் துக்கம் ஆத்மாவினுடைய தர்மமாகத்தான் ஆகவேண்டும்.

அந்த துக்கம் தேஹதர்மமாக ஆகாது. தேஹம் ஜடமானதினால் துக்கத்திற்கு தர்மியாக ஆகாது. சேதனமான பொருள் தான் துக்கத்திற்கு தர்மியாக ஆகும். அசேதனமான தேஹத்தில் துக்கத்தை தள்ளிவிட்டால், தேஹமே ஆத்மாவென்ற "சார்வாக" மதத்தில் வைதிகர்களுக்கு ப்ரவேசம் ஏற்பட்டதாக ஆகிவிடும். ஆகையால் துக்கம் ஆத்மாவின் தர்மம்தான். அந்த துக்கம் பீஷ்மர் முதலானவர்களுடைய ஆத்மாவுக்குத் தன்னால் ஏற்படவேண்டாம் என்று தான் அர்ஜுனனுடைய அபிப்ராயம் என்று சிலவாதிகள் சொல்கிறார்கள்.

அதற்கு ஸமாதானமாக பகவான் அர்ஜுனனுக்கு உபதேசிப்பதாவது.:—

"मात्रास्पर्शास्तु कौन्तेय
शीतोष्णसुखदुःखदाः।
आगमापायिनोऽनित्याः
तान् तितीक्षस्व भारत॥"

"மாத்ராஸ்பர்சாஸ்து கௌந்தேய
சீதோஷ்ணஸுக துக்கதா:।
ஆகமாபாயினோऽநித்யா:
தான் திதீக்ஷஸ்வ பாரத।"

இந்தச்லோகத்தின் பதவாரியாக உரையை அடியிற்கண்டபடி அறியவும்,

हे, कोन्तेय (ஏ, கௌந்தேய) = ஏ, அர்ஜுனா
मात्रास्पर्शाः (மாத்ராஸ்பர்சா:) = ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தம் என்ற ஐந்து விஷயங்களும் எந்தெந்த இந்த்ரியங்

களால் நன்ருய் அறியப்படுமோ, அந்தந்த இந்த்ரியங்களால் (சக்ஷுஸ், ச்ரோத்ரம், த்வக், ரஸனம், க்ராணம்) கண், காது, தோல், நாக்கு, மூக்கு என்ற ஐந்து கரணங்களுக்கும் தன் தன் விஷயங்களோடு ஏற்படுகிற ஸம்பந்தங்கள்.

शीतोष्णसुखदुःखदाः (சீதோஷ்ண ஸுகதுக்கதா:)	=	சைத்யம் (குளிர்ச்சி) ஔஷ்ண்யம், (சூடு) ஸுகம், துக்கம் இவைகளை கொடுக்கிறதுகளாக
(भवन्ति) பவந்தி	=	ஆகிறதுகள்
आगमापायिनः (ஆகமாபாயின:)	=	ஸுகதுக்காதிகளுக்கு காரணமான இந்த்ரியவிஷய ஸம்பந்தங்களோ, வருவதும்போவதுமான ஸ்வபாவமுள்ளவைகள்
(अत एव) (அத ஏவ)	=	ஆகையால் தான்
ते (தே)	=	அந்த இந்த்ரியவிஷய ஸம்பந்தங்கள்
अनित्याः (அநித்யா:)	=	உத்பத்தி அழிவு, இதுகளோடு கூடியவைகள்
(तस्मात्) தஸ்மாத்	=	ஆகையால்
तान् (தான்)	=	அந்த இந்த்ரியவிஷய ஸம்பந்தங்களை
तितीक्षस्व (திதிக்ஷஸ்வ)	=	பொறுத்துக்கொள்

இதனல் அர்ஜுனனுக்கு பகவான் உபதேசம் செய்வதாவது :— "அர்ஜுனு, அந்தந்த இந்த்ரியங்களுக்கும் அந்தந்த விஷயங்களுக்கும் ஏற்படுகிற "ஸந்நிகர்ஷம்" என்று சொல்லப்படுகிற ஸம்பந்தம் தான், சைத்யம், (குளிர்ச்சி) ஔஷ்ண்யம் (சூடு) ஸுகம், துக்கம் இது முதலானதுகளை கொடுக்கின்றது. அந்த இந்த்ரிய விஷயஸம்பந்தமோ நித்யமல்ல. விஷயங்களும் இந்த்ரியங்களும் எப்போதும் ஸம்பந்தத்தோடு கூடினதாக இல்லை என்பது லோகப்ரஸித்தமானது. ப்ரக்ருதத்தில், அர்ஜுனன், பருஷமான (கொடூரமான) சஸ்த்ரங்களுடைய (ஆயுதங்கள்) அடிகள் பீஷ்மர் முதலான மஹான்களுடைய சரீரத்தில் விழும்போது, அவர்களுடைய ஆத்மாவுக்கு துக்கம் ஏற்படுமே என்று நினைத்ததினல், த்வகிந்த்ரியத்துக்கும் (தோலுக்கும்) பருஷமான சஸ்த்ரங்களின் ஸ்பர்சமாகிய விஷயத்திற்கும் உள்ள ஸம்பந்தத்தினல் ஏற்படுகிற துக்கமானது குறிப்பிடப்பட்டதாக ஆகிறபடியால், த்வகிந்த்ரியத்திற்கும் ஸ்பர்சம் என்ற விஷயத்திற்கும் உள்ள ஸம்பந்தம் தான், அர்ஜுனனுடைய சோகத்திற்கு நிமித்தம் ஆகிறதென்று வெளியாகிறது. பகவானே அந்த துக்கத்தை மாத்திரம், அநித்யமான காரணத்தினல், ஸஹித்துக்கொள் என்று சொல்ல வேண்டியதாக இருக்க, சீதம், உஷ்ணம், ஸுகம் இந்த மூன்றையும் சேர்த்துச்சொல்லியிருக்கிறர்.

அதன் அபிப்ராயமோ, அர்ஜுனு, த்வகிந்த்ரியத்திற்கும் ஹிமம் என்ற பனிக்கும், ஸம்யோகம் என்ற ஸம்பந்தம் ஏற்பட்டவுடன் சைத்யம் என்ற குளிரை அது எப்படி கொடுக்கிறதோ, அப்படியே த்வகிந்த்ரியத்திற்கும், நெருப்புக்கும் ஸம்யோகம் என்ற ஸம்பந்தம் ஏற்பட்டவுடன் ஔஷ்ண்யம் என்ற தாபத்தைக் கொடுக்கிறதோ, அப்படியே த்வக்ந்த்ரியத்

திற்கும் ரொம்பவும் ம்ருதுவான புஷ்பங்களுக்கும் ஏற்படுகிற ஸம்பந்தத்தினுல், ஸுகத்தை அது எப்படி உண்டுபண்ணுகிறதோ, அதே மாதிரியாக, த்வகிந்த்ரியத்திற்கும் பாணங்களுக்கும் ஏற்படுகிற ஸம்யோக ஸம்பந்தத்தினுல், அந்த இந்த்ரிய விஷய ஸம்யோகம் துக்கத்தைக் கொடுக்கிறது; என்று ப்ராக்ருதத்திலுள்ள துக்கத்திற்கு, சீதோஷ்ண ஸுகத்தை த்ருஷ்டாந்தமாகத்தான், ஸ்ரீ க்ருஷ்ண பகவான் வெளிப்படுத்தினதாக, பகவானுடைய அபிப்ராயம் வெளியாகிறது. சீதோஷ்ணங்களைக் காட்டிலும் ஸுக துக்கங்களை வேருகப் பிரித்தபோதிலும், ஸுக துக்கங்கள் என்றைக்கும் ஒரே ஸ்வபாவமுள்ளதாகத்தானிருக்கும். அதாவது ஸுகம் ஸுகமாகத்தானிருக்கும். துக்கமாக மாருது. துக்கமும் துக்கமாகவேதானிருக்கும்; ஸுகமாக மாருது, என்பது ஸர்வஜனங்களுக்கும் அனுபவஸித்தமானது. சீதோஷ்ணமோ அவ்விதமல்ல. அவைகளுடைய ஸ்வபாவங்கள் அநியதமாக (மாறுதலுடையதாக) காணப்படுகிறது. அதாவது வெயில் காலத்தில் சீதம் ஸுக ஸ்வபாவத்துடன் கூடினதாக இருந்தாலும், குளிர்காலத்தில் அந்த சீதமே துக்க ஸ்வபாவத்துடன் கூடினதாக ஆகிறது. அவ்விதமே உஷ்ணமும் குளிர்காலத்தில் ஸுகத்தைக் கொடுக்கும் ஸ்வபாவத்தோடு கூடினதானுலும், கோடை காலத்தில் துக்கத்தைக் கொடுக்கும் ஸ்வபாவத்துடன் கூடினதாக மாறிவிடுகிறது. இதனுல் சீதமோ, உஷ்ணமோ, மாறுதலையடையாத ஸ்வபாவமாக ஆகிறதில்லை. இதுவும் ஸர்வப்ராணிகளுக்கும் அனுபவஸித்தமானதுதான். இவ்விதம், அநியதமான ஸ்வபாவமுள்ள சீதோஷ்ணங்களையும், நியத ஸ்வபாவமுள்ள ஸுகதுக்காதிகளையும் வேவ்வேருகப் பிரித்துக் காட்ட வேண்டுமென்றெண்ணித்தான், பகவானும், "शीतोष्ण सुखदुःखदाः" (சீதோஷ்ண ஸுகதுக்கதா:) என்று பிரித்து உபதேசித்தார்.

இதுகளோ, இந்த்ரியங்களுக்கும் விஷயங்களுக்கும் உள்ள ஸம்பந்தத்தால் ஜன்யமாக (உண்டாகும் ஸ்வபாவமுள்ளது) ஆகிறது என்றும் தெரிகிறது. இந்த்ரிய விஷய ஸம்யோகங்களோ, முன் சொல்லியபடி வருவதும் போவதுமாக இருப்பதினுல், (அநித்யங்கள்) உற்பத்தி அழிவுகளோடு கூடினவைகள். அவ்விதம் அநித்யமான இந்த்ரிய விஷய ஸம்யோகத்தினுல் உண்டான துக்கமும், அநித்யமாகத்தான் இருக்கவேண்டும். காரணம் அநித்யமாகும் போது, கார்யம் நித்யமாக ஆகுமா? அநித்யமான துக்கமோ, நித்யமான ஆத்மாவினுடைய தர்மம் என்று எப்படி சொல்லக் கூடும். ஆத்மாவை நித்யம் என்றே "नत्वेवाहं जातुनासं" (நத்வேவாஹம் ஜாதுநாஸம்) என்ற வாக்யத்தினுல் நன்ருக முன்னமேயே விவரிக்கப்பட்டிருக்கிறது.

"धर्मधर्मिणोः समसत्ताकत्वं,
अन्यथा धर्मधर्मिभावोच्छेदः"
தர்ம தர்மிணே: ஸமஸத்தாகத்வம்,
அந்யதா தர்ம தர்மிபாவோச்சேத:

என்ற சாஸ்த்ர வசனத்தினுல், விஷம ஸத்தையுள்ள (வெவ்வேறு ஸ்வபாவமுள்ள) இரண்டு பதார்த்தங்களுக்கு தர்ம, தர்மி பாவமே ஸித்திக்காது என்பது வெளியாகிறது. துக்கமோ இந்த்ரிய விஷய ஸம்யோக ஜன்யமானதினுல் அநித்யமாகிறது. ஆத்மாவோ நித்யமான வஸ்து. நித்யமான ஆத்மாவுக்கும் அநித்யமான துக்கத்திற்கும் தர்ம தர்மிபாவம் எப்படி ஏற்படும். ஆகையால் துக்கமானது ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமான தர்மமாக ஆகாது.

"धर्मिनिवृत्तिमन्तरा स्वाभाविक धर्मानिवृत्तेः" "தர்மிநிவ்ருத்திமந்தரா ஸ்வாபாவிக தர்மாநிவ்ருத்தே:" என்ற ந்யாயத்தால் துக்கத்தை ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமான தர்மமாக ஒப்புக்கொள்ளும

பக்ஷத்தில், ஆத்மா உள்ளவரையில் துக்கமும் காணப்படவேண்டும். **"नत्वेवाहं"** "நத்வேவாஹம்" என்ற ச்லோகத்தினலோ ஆத்மா வுக்கு இல்லாமலிருக்கும் காலம் இல்லையென்றே சொல்லப்பட்டிருக் கிறது. ஆகையால் ஆத்மா எப்போதும் இருக்கிறன். அதனல் துக்கம் ஆத்மாவினுடைய தர்மமானல், துக்கமும் எப்போதும் காணப்படவேண்டும். அதுவும் ரொம்ப ஸம்மதம்தான் என்று எந்த வாதிகளாலும ஒப்புக்கொள்ளமுடியாது. அப்படியானல், ஆத்மா நித்ய துக்கியாகவே ஆகுமானபடியால், துக்க நிவ்ருத்தி யாகிற மோக்ஷத்திற்கே அவகாசமில்லாமல் போய்விடுகிறது. அநிர்மோக்ஷ ப்ரஸங்கம் (மோக்ஷம் என்கிற பேச்சே இல்லை) என்ற பெரிய தோஷம் வந்துவிடும். ஆகையால் எந்த வாதிகளா லும் துக்கத்தை ஆத்மாவுக்கு ஸ்வாபாவிக தர்மமாக ஒப்புக்கொள்ள முடியாது. துக்கம் அநித்யமானதினல், அதற்கு தர்மியையும் ஒரு அநித்யமான பதார்த்தத்தைத்தான் தேடி எடுக்கவேண்டும். அப்படி நாம் தேடினலோ,

"कामस्संकल्पो विचिकित्सा
कामायेऽस्य हृदि स्थिताः।"
"காம:ஸங்கல்போ விசிகித்ஸா
காமாயேஅஸ்ய ஹ்ருதி ஸ்திதா:"

என்ற ச்ருதிகளாலும்,

"शोकहर्षभयक्रोध लोभमोहस्पृहादयः।
अहंकारस्यदृश्यन्ते जन्ममृत्युश्चनात्मनः॥"

(சோக ஹர்ஷபயக்ரோத, லோப மோஹ ஸ்ப்ருஹாதய:

அஹங்காரஸ்ய த்ருச்யந்தே, ஜன்ம ம்ருத்யுச்ச ந ஆத்மந:) என்ற ஸ்ம்ருதிகளாலும், அந்தக்கரணம் என்ற மனதைத் தான், அநித்யமான துக்கத்திற்கு தர்மியாக நாம் ஒப்புக்கொள்ள

வேண்டும். ஆகையால் இந்த்ரிய விஷய ஸம்யோகத்தினால் உண்டான துக்கம் அந்தக்கரணத்தைச் சேர்ந்ததுதான். ஆத்மாவைச் சேர்ந்ததல்ல.

தார்க்கிகர்கள் முதலான த்வைதிகளும் துக்கத்தை அந்தக் கரணத்தின் தர்மமாகத்தான் ஒப்புக்கொள்ளும்படி நேரிடுகிறது. தார்கிகர்களுடைய ஸித்தாந்த ரீதியாகவே,

"नहिस्वभावो भावानां, व्यावर्त्येत औष्ण्यवद्रवेः।"

(நஹிஸ்வபாவோ பாவாநாம், வ்யாவர்த்யேத ஒளஷ்ண்யவத்ரவே:)

என்ற ஸ்ம்ருதி வசனத்தினால், ஸூர்யனுக்கு ஒளஷ்ண்யம் (சூடு) என்ற தர்மம் ஸ்வாபாவிகமானதினால், எப்படி ஸூர்யனுள்ள வரையில் போகாமலிருக்கிறதோ, அதுபோல் ஆத்மாவுக்கு துக்கத்தை ஸ்வாபாவிக தர்மமாக ஒப்புக்கொண்டால், ஆத்மாவுள்ளவரையில் அந்த துக்கம் போகாமலிருக்கவேண்டியிருப்பதினாலும், ஆத்மா இருக்கும் போதெல்லாம், (அதாவது துக்கம், மூர்ச்சை முதலான அவஸ்தைகளிலுங்கூட) அந்த துக்கத்தை ஆத்மாவினிடத்தில் காணப்படாமலிருப்பதினாலும், முன் சொன்ன தார்க்கிகர்கள்கூட, துக்கத்தை அந்தக்கரணத்தின் தர்மமாகத்தான் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

ஆகிலும், ப்ராணிகளோ ஸ்தூலசரீரத்திற்கும், ஆத்மாவுக்கும் உள்ள பேதத்தை நன்றாகத் தெரிந்துகொள்ளாத காரணத்தினால் ஏற்பட்ட **"मनुष्योहं अहंमनुष्यः"** (மனுஷ்யோஹம் அஹம் மனுஷ்ய:) என்ற ஸ்தூலசரீரத்திற்கும் ஆத்மாவுக்கும் உள்ள தர்மி ஐக்ய அத்யாஸத்தால், ஸ்தூலசரீரத்தின் தர்மமாகிய ஜன்ம மரணங்களை ஆத்மாவினிடத்தில் ஆரோபணம் செய்து கொண்டு

"देवदत्तो जातः, यज्ञदत्तो मृतः"
(தேவதத்தோ ஜாத: யக்ஞதத்தோ ம்ருத:)

என்று வ்யவஹாரம் செய்வது போல், ஸூக்ஷ்ம சரீரமாகிய அந்தக்கரணத்திற்கும், ஆத்மாவுக்கும் உள்ள பேதத்தை தெரிந்து கொள்ளாத காரணத்தினால் ஏற்பட்ட

"अहं कर्ता" (அஹம் கர்த்தா) என்ற அந்தக்கரணத்திற்கும் ஆத்மாவுக்குமுள்ள தர்மி ஐக்யாத்யாஸத்தால் அந்தக்கரணத்தின் தர்மங்களாகிற துக்கம் முதலானதுகளை, ஆத்மாவினிடத்தில் ஆரோபணம் செய்து கொண்டு, "अहं दुःखी" (அஹம் துக்கி) என்று மூடஜனங்கள் ப்ரலாபிக்கின்றார்கள். இதனால் துக்கமானது ஆத்ம தர்மமாக ஆகாது. ஆகையால், ச்ருதி, ஸ்ம்ருதி, யுக்தி, வித்வான்களுடைய அநுபவம் இதுகளால் அனாத்மாவாகிய அந்தக்கரணத்தினுடைய தர்மம் தான் துக்கம் என்று தெரிந்து கொண்டிருந்தும், அந்த துக்கமானது தனக்கு தர்மியான அந்தக்கரணத்தினுடைய ஐக்யாத்யாஸம் ஆத்மாவினிடத்தில், மூடஜனங்களுடைய ரீதியாக இருப்பது என்ற தைர்யத்தை வைத்துக்கொண்டு, அந்தக்கரணத்தில் தோன்றவேண்டியதான அந்த துக்கமானது தன் தோற்றத்திற்கு ஒருநாளும் அர்ஹமாகாமலும் நித்யானந்த ரூபமாயுமுள்ள ஆத்மாவினிடத்தில், ஆத்மாவினுடையது போல், (கிளிஞ்சலில் வெள்ளிபோலவும், பழுதையில் பாம்பு போலவும்) தோன்றுகிறது.

ஆகையால் அந்த துக்கம் பொய்யென்று நிர்மானித்து உத்தமகுலத்தில் குந்திதேவியினுடைய வரப்ரஸாதத்தால் பிறந்த உனக்கு அதையும், அதற்குக் காரணமான கடோரமான சஸ்த்ரங்களாகிய விஷயங்களுக்கும் பீஷ்மாதிகளுடைய சரீரங்களில் வ்யாபித்திருக்கிற த்வகிந்த்ரியத்திற்கும் ஏற்படுகிற ப்ரஹார ரூபமான (அடி) ஸம்பந்தங்களையும், ஸஹித்துக்கொள்வதே அழகா

கும். ஆகையால் ஜன்ம மரண நிமித்தமாக ஆத்மா துக்கத்திற்கு விஷயமாகாது என்று எவ்விதம் சொன்னோமோ, அது போல் அஸ்த்ர சஸ்த்ர ப்ரஹாரண ஜன்யமான துக்க நிமித்தமாகவும் ஆத்மா சோகத்திற்கு விஷயமாகாத பொருளே. ஆகையால் அசோச்யமான ஆத்ம ஸ்வரூபத்தைப் பற்றி நீ துக்கிப்பது மிகவும் தப்பு" என்று அர்ஜுனனுக்கு பகவான் உபதேசித்தார்.

அர்ஜுனன், "க்ருஷ்ணா, நீ சொல்வதெல்லாம், அழகாகவும் சாஸ்த்ர ஸம்மதமாகவுமிருக்கிறது. ஆகிலும் என் புத்திக்கு, எதற்காக இந்த கஷ்டமான வேதாந்த உபதேசம் என்று தோன்றுகிறது. கடோரமான யுத்தத்தைச் செய்து பீஷ்மர் முதலானவர்கள் போய் விடுவார்களோ என்று நான் சங்கிக்க, நீ அதற்கு; தேஹம், வேறு, ஆத்மா வேறு என்று பிரித்துக்காட்டி, மரணம் தேஹத்தைச் சேர்ந்தது, ஆத்மாவுக்கு இல்லை; அத்யாஸத்தால் தான் தேஹ தர்மமாகிய மரணத்தை ஆத்மாவினிடத்தில் ஆரோபணம் செய்து கொண்டு, மூடஜனங்கள் ஆத்மாவே போய்விட்டதாக துக்கிக்கிறார்கள் என்று எனக்கு நீ ஸமாதானம் செய்ய, அதற்குப்பிறகும் நான் அவ்விதம் ஸமாதானத்தை அடையாமல் ஆத்மாவுக்கு மரணமில்லாத போனாலும் பீஷ்மருடைய தேஹத்தை நான் ஆயுதங்களால் அடித்துப்பிளக்கும் போது, அதனால் ஏற்படும் துக்கம் பீஷ்மருடைய ஆத்மாவுக்குத் தானே ஏற்படும், அதற்கும் நான் ஆளாக ஆகமாட்டேன் என்று நான் சங்கித்தேன். அதன் மேலும் நீ ரொம்பவும் ச்ரமப்பட்டு, என்னமோ இந்த்ரியம், விஷயம், அவைகளின் ஸம்பந்தம் அதனால் துக்கம் உண்டாகிறது. அந்த ஸம்பந்தமும் அநித்யம். அதனாலுண்டாகும் துக்கமும்

அநித்யமே. அந்த அநித்யமான துக்கமோ எப்படி நித்யமான ஆத்மாவுக்கு தர்மமாகும்? அந்தக்கரணத்தின் தர்மம் தான் அந்த துக்கம், ஆத்மாவினுடையதல்ல. ஆத்மா வேருகவும், அந்தக்கரணம் வேருகவும் இருக்கும்போது, மூடஜனங்கள் அத்யாஸத்தால் ஆத்மாவையும் அந்தக்கரணத்தையும் ஒன்று பண்ணிக்கொண்டு, அந்தக்கரணத்தின் தர்மத்தை ஆத்மாவினிடத்தில் ஆரோபணம் பண்ணிக்கொண்டு, ஆத்மாவைத் துக்கத்துடன் கூடினதாக வ்யவஹாரம் செய்கிருர்கள் என்று நீ உபதேசித்தாய். அந்த விவேகத்தினுல் நான் பீஷ்மாதிகளுடைய விஷயத்தில், சோகத்திற்கு நான் அவகாசம் கொடுக்காமலிருப்பதைக் காட்டிலும் இந்த யுத்தத்தையே செய்யாமலிருந்து விட்டால், பீஷ்மாதிகளுடைய விஷயத்தில் யாதொரு விதமான கவலைக்கு இடமே கிடையாது. அதல்லவா மேலானது. சேற்றை மிதித்துவிட்டு காலை அலம்பிக் கொள்வதற்கு குளத்தைத் தேடுவதைக் காட்டிலும் சேறில்லாமலுள்ள மார்க்கத்தில் செல்வது மேலானது என்ற அர்த்தமுள்ள

"प्रक्षालनाद्धि पङ्कस्य दूरादस्पर्शनं वरम्"

(ப்ரக்ஷாளனுத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்சனம் வரம்)

என்ற வாக்யமானது உனக்குத் தெரியாதா? ஆகையால் யுத்தம் செய்து துக்கமாகிய சேற்றைப் பூசிக்கொண்டு விவேகமாகிற குளத்தைத் தேடுவதைக் காட்டிலும், துக்கமென்ற சேற்றின் ஸம்பந்தமில்லாத யுத்தம் செய்யாமலிருத்தல் என்ற உபரதியாகிற (ஒழிவு) மார்க்கத்தில் செல்வதல்லவா நமக்கு மேன்மையானது: ஆகையால் நீ என்ன சொன்னுலும் நான் யுத்தம் செய்யத் துணியவே மாட்டேன் என்று அர்ஜுனன் ஒரே பிடிவாதமாக பகவானுடைய வார்த்தையை மறுத்துவிட்டான்.

(தொடரும்)



श्रीशृङ्गगिरि शिवाभिनव नृसिंहभारती स्वामिनः॥

ஸ்ரீ ச்ருங்ககிரி சிவாபிநவ நரஸிம்மபாரதி ஸ்வாமிந: ||

உ

ஸ்ரீ சங்கரவிஜயம்.

முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.



முன் சொன்ன ப்ரகாரம் ஆர்யாம்பாள் என்ற மஹாபதிவ்ரதா சிரோமணியானவள், மஹா கைலாஸாதிபதியான பரமேச்வரனை தனது கர்ப்பத்தில் தரிக்கும்படியான பெரியபாக்யத்தையடைந்த காரணத்தினால் நாளுக்குநாள் திவ்யமான தேஜஸ்ஸோடு கூடினவளாயும், அடிக்கடி தன்னைப் பார்க்க வந்த ஜனங்களுக்கு பரம ஸந்தோஷத்தைக் கொடுக்கிறவளாயுமிருந்துகொண்டு பரதேவதையைப் போல் விளங்கி வந்தாள். இவ்விதமிருக்க, பரமேச்வரனுடைய ஆவிர்ப்பாவ காலமும் ஸமீபித்துவிட்டது. அதற்கு அநுகுணமாக காலமும் ஸர்வ குணங்களோடுகூடினதாகவும், மிகவும் சுபமாயும், ஸ்வயமாகவே வந்து சேர்ந்துகொண்டது. அவ்விதமான புண்ய முஹூர்த்தத்தில் ஆர்யாம்பாள் யாதொருவிதமான ச்ரமமும் தன் சரீரத்திற்கு ஏற்படாமல், பார்வதி தேவியானவள் ஷண்முகப் பெருமானைப் பெற்றெடுத்தது போல் ப்ரக்ருத கதையில் நாயகனான சங்கர பகவத் பாதாள் என்ற லோககுருவை புத்ரனாக அடைந்து ஆநந்தித்தாள்.

"लग्ने शुभे शुभयुते सुषुवे कुमारं
श्रीपार्वतीव सुखिनी शुभवीक्षितेच ।
जाया सती शिवगुरोः निजतुङ्गसंस्थे
सूर्ये कुजे रविसुतेच गुरौच केन्द्रे ॥"

"லக்னே சுபே சுபயுதே ஸுஷுவே குமாரம்
ஸ்ரீபார்வதீவ ஸுகினீ சுபவீக்ஷிதேச।
ஜாயாஸதீ சிவகுரோ: நிஜதுங்கஸம்ஸ்தே
ஸூர்யே குஜே ரவிஸுதேச குரௌச கேந்த்ரே॥"

ஸாக்ஷாத் மஹா கைலாஸாதிபதியான பரமேச்வரன் ஆர்யாம்பாளுடைய புத்ரனாக அவதரித்த சுபமான காலத்தின் மஹிமையையோ ஆதிசேஷனாலேகூட வர்ணிக்க முடியாததே. ஆகிலும், கொஞ்சம் அந்தப்பெருமையை அறியவும். அதாவது, ஸூர்யன், செவ்வாய், சனி, குரு இந்த நான்கு க்ரஹங்களும் முக்யமாய் உச்சஸ்தானத்திலும், கேந்த்ரஸ்தானத்திலும் இருக்கும் போது லோககுருவான ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் அவதாரம் செய்தார்கள் என்று தெரிகிறது. ஸூர்யன் மேஷ ராசியில் உச்சனாகவும், செவ்வாய் மகர ராசியில் உச்சனாகவும், சனி துலாராசியில் உச்சனாகவும், குரு கடகராசியில் (நான்காவது கேந்த்ரஸ்தானத்தில்) உச்சனாகவும், இவ்விதம் நான்கு க்ரஹங்களும் உச்சஸ்தானங்களிலிருந்து கொண்டு உத்ஸாஹ, பல, சக்திகளோடு கூடினவர்களாக விளங்கி வந்தார்கள்.

"एकग्रहोच्चे जातस्तु भूपतित्वं इयान्नरः
द्विग्रहोच्चेच जातस्तु चक्रवर्तीभवेद्ध्रुवम् ।
त्रिग्रहोच्चेच जातस्तु सार्वभौमो नसंशयः
चतुर्ग्रहोच्चे जातस्तु भगवान् लोकनायकः ॥
(पाठभेदः–साक्षाच्छम्भुस्सनातनः)

"ஏக க்ரஹோச்சே ஜாதஸ்து பூபதித்வமியாந் நர:।
த்விக்ரஹோச்சேச ஜாதஸ்து சக்ரவர்த்திபவேத்த்ருவம்।
த்ரிக்ரஹோச்சேச ஜாதஸ்து ஸார்வபௌமோ நஸம்சய:।
சதுர்க்ரஹோச்சே ஜாதஸ்து பகவான் லோகநாயக:।
(பாடபேத:— ஸாக்ஷாத்சம்புஸ்ஸநாதந:)

என்ற சாஸ்த்ரத்தால் நான்கு க்ரஹம் உச்சஸ்தானத்திலிருப்பதைக் கொண்டு லோககுருவான ஸ்ரீசங்கராசார்யாள் ஸாக்ஷாத் பரமேச்வரனென்றே அறியவேண்டும். அத்துடன்

"लग्नानां आदिमो लग्नः पुत्रजन्मनि शस्यते"
"லக்னும் ஆதிமோ லக்ன: புத்ர ஜந்மநி சஸ்யதே।"

என்ற வசனத்தால் மேஷலக்னத்தில் பரமாசார்யாளுடைய அவதாரம் என்பதும் ஸித்தமாகிறது. ஸூர்யன் உச்சமாக யிருப்பதால் சித்திரை மாதம் என்பதும் தெரிகிறது. சிவாம்சமானதினால் ஆர்த்ரா (திருவாதிரை) நக்ஷத்ரம் என்றும் தெரிகிறது. "ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம் ஈசானம்" என்ற ஐந்து தத்வங்களும் பரமசிவனுக்கு ஸ்வரூபமானதினாலும், சந்த்ரகலாதரனானதினாலும், சந்த்ரனுக்கு வ்ருத்தி ஏற்படுகிற சுக்லபக்ஷத்தில் 5 (ஐந்து) கலை சந்த்ரனுக்கு பூர்த்தியான பஞ்சமி தினத்தன்று பரமாசார்யாளுடைய அவதாரம் ஏற்பட்டது என்றும் ஸித்தமாகிறது. சித்திரை மாதத்திலுள்ள சுக்லபக்ஷம் வைசாக சுத்தத்தில் சேர்ந்ததானதினாலும், வைசாக சுத்த பஞ்சமியே ஸ்ரீசங்கர ஜயந்தி தினமாகும்.

அத்துடன் பரமாசார்யாள் அவதாரம் செய்து தனது மாயையினால் பால பாவத்தை (சிசுத் தன்மை) யடைந்தபோது, அந்தக் காலடியென்ற க்ராமத்திலுள்ள மஹா ஜனங்களெல்லோரும் இந்த குழந்தையைப்பார்க்க வந்தார்கள். அவ்விதம் பார்க்க வந்து

ஜனங்களுக்கு இந்த குழந்தையும் தனது த்ருஷ்டி விசேஷத்தினுல், பரமாநந்தத்தைக் கொடுத்து அவர்களை க்ருதார்த்தர்களாகச் செய்த காரணத்தினுல், அந்த குழந்தையின் தகப்பனுரான சிவ குருவானவர், அந்தக்குழந்தைக்கு சங்கரன் என்ற திருநாமத்தை நாமகரணம் செய்தார். அந்த திருநாமத்தின் பொருளை கவனித்தாலே ஆசார்யாளுடைய அவதார தினம் வெளியாகிறது. அதாவது, மாத்ருகாக்ஷரத்தில் கவர்க்கத்தில் முதலாவது எழுத்து ககாரம், இதனுல் ஆறு ருதுக்களில் முதலாவதான வஸந்த ருது என்றது வெளியாகிறது. அந்த மாத்ருகாக்ஷரத்தில் யவர்க்கத்தில், இரண்டாவது எழுத்து ரகாரம், அதனுல் முன் சொன்ன வஸந்த ருதுவில் இரண்டாவதான வைசாக மாதத்தைக் காண்பிக்கிறது. மறுபடியும் அந்த க காரத்தையே கவனித்தால், இரண்டு பக்ஷங்களில் முதலாவதான சுக்லபக்ஷத்தைக் காண்பிக்கிறது. श (ச) காரமானது யவர்க்கத்தில் ஐந்தாவது எழுத்தானதினுல் திதிகளுக்குள் ஐந்தாவதான பஞ்சமியைக் காண்பிக்கிறது. இதனுல் வஸந்த ருதுவில் வைசாக மாதத்தில், சுக்ல பக்ஷத்தில், பஞ்சமி திதியன்று ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாள் என்ற பரமாசார்யாள் அவதாரம் செய்தார்கள் என்பது வெளியாகிறது.

இவ்விதம் ஸமஸ்தமான ப்ராணிகளையும் ஸன்மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கச் செய்யவேண்டுமென்ற உத்தேசத்துடனும்

"यदा यदाहि धर्मस्य ग्लानिर्भवतिभारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहं ॥"

"யதா யதாஹி தர்மஸ்ய க்லாநி: பவதி பாரத।
அப்யுத்தானம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்।

என்ற தன் ப்ரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்ற அபிப்ராயத்துடனும், பரமேச்வரன் ஆர்யாம்பாளை வ்யாஜமாக வைத்

துக்கொண்டு இந்த புண்ய பூமியில் அவதரித்து ஒரு சிறு குழந்தையாகத் தோன்றின பெருமையைப் பார்த்த சிவகுரு வென்ற அந்த குழந்தையின் தகப்பனாரானவர், பரமாநந்தத்தை யடைந்து தான் ஆநந்த ஸமுத்ரத்தில் மூழ்கினவராகவே யிருந் தாலும்,

> **"अट्टहासेन सोस्नायात्**
> **पुत्रजन्मोत्सवे जले"**
> (அட்டஹாஸேந ஸோஸ்நாயாத்
> புத்ர ஜந்மோத்ஸவே ஜலே)

என்ற சாஸ்த்ரத்தை யனுஸரித்து பூர்ணாநதியில் சிவகுருவான வர் அவப்ருத ஸ்நானம் செய்துவிட்டு "ஜாத இஷ்டி" என்ற கர்மாவினால் தேவாள், பித்ருக்கள் முதலானவர்களை த்ருப்தி செய்து வைத்து அநேக ப்ராம்மணோத்தமர்களுக்கு, கோ, பூ, ஹிரண்ய வஸ்த்ரங்களை ஏராளமாக தானம்செய்து பரமாநந் தத்தை யடைந்தார். அந்த மாதிரியாக ஆசார்யாள் பிறந்தஸம யத்தில் ஸ்வபாவமாகவே விரோதமுள்ள (யானை, ஸிம்மம்) (கீரி, பாம்பு) (பாம்பு, எலிகள்) (நாய், பூனை) முதலான திர்யக் ஜந்துக்கள்கூட தன்தன் வைரத்தை விட்டுவிட்டு மிகவும் அந் யோந்ய பாவத்தோடு குதித்து விளையாடி வந்தன. அந்த ஆச் சர்யத்தைப் பார்க்கும் ஜனங்களுக்கு ஏற்பட்ட ஸந்தோஷத்தை யளவிட முடியாது.

"अहिंसा प्रतिष्ठायां तत्सन्निधौ वैरत्यागः"

(அஹிம்ஸா ப்ரதிஷ்டாயாம் தத்ஸந்நிதௌ வைரத்யாக:)

என்று அஹிம்ஸையை முக்ய தர்மமாகக் கைக்கொண்டவர்களு டைய முன்பாக ஸ்வபாவத்திலேயே வைரமுள்ள ப்ராணிகள்கூட விரோதத்தை முழுமையும் விட்டுவிடும், என்ற யோக ஸூத்

ரக்காராளுடைய ஸித்தாந்தத்தினால் அஹிம்ஸை என்ற பரம தர்மத்திற்கு இந்தக் குழந்தையே இருப்பிடமான ஸ்தானம் என்று தீர்மானித்து மஹாஜனங்கள் எல்லோரும் களிப்படைந் தார்கள்.

அத்துடன் இச்குழந்தை பிறந்த ஸமயத்தில், "ஜகத் பொய் ப்ரம்மம் ஒன்றுதான் ஸத்யம், அந்த ப்ரம்மமோ ஆத்மஸ்வரூபம் தான்" என்றதாகிய அத்வைதஸித்தாந்தத்தை அவலம்பித்த வாதிகளுக்கு விரோதிகளான த்வைதிகள் தன் கையில் அவரவர்கள் தங்கள் தங்கள் ஸித்தாந்தத்திற்குரிய புஸ்தகங்களை வைத்துக் கொண்டு, தங்களுடைய சிஷ்யர்களுக்கு த்வைதத்தையே போதித் துக்கொண்டிருக்கும்போது, அகாரணமாக அவர்களுடைய கையிலி ருந்து புஸ்தகங்கள் பூமியில் கவிழ்ந்து விழுந்தன. த்வைதிகளும் நம்முடைய ஸித்தாந்தத்தைக் கண்டனம் செய்ய யாரோ நமக்கு ஒரு விரோதி அவதரித்து விட்டான் என்று நினைத்து பயந்தார்கள் உபநிஷத் வாக்யங்களோ, தன்னுடைய அபிப்ராயம் அத்வைதத் ததில் தான் என்பதை வெளிப்படுத்த ஒரு மஹானுபாவன் நமக்கு பரம பந்துவாக அவதரித்திருக்கிறான் என்பதை நினைத்து, தான் பரமாநந்தத்தை யடைந்திருக்கும் காரணத்தினால், த்வைதிகளுடைய கைகளிலிருந்து புஸ்தகங்கள் தானே கீழேவிழுந்தவைகளைப் பார்த்து சிரித்து பரிஹாஸம் செய்தன.

ஸர்வக்ஞனை வ்யாஸாசார்யாளுடைய மனதாகிய பத்மமு குளம் (தாமரைமொட்டு) ஆசார்யாளாகிற ஸூர்யனுடைய உதயத் தைக்கண்டவுடன் மலர்ந்து ப்ரஸன்னமாக ஆகிவிட்டது.

"व्यासो दर्शयतिस्म सूत्रकलित न्ययौध रत्नावलीः
अर्थाऽऽलाभवशात् नकैरपि वुधैरेतागृहीताश्चिरं।
अर्थाप्त्या सुलभाभिः आभिरधुना ते मण्डिताः पण्डिताः
व्यासश्चापकृतार्थतां यतिपतेः औदार्यं आश्चर्यकृत्॥"

இந்தச்லோகத்தால் வெளியாகிறதாவது,

ஒருதேசத்தில் ஒருவைச்யன் வஜ்ரம், வைடூர்யம், கோமேதகம், மாணிக்கம், மரகதம், இந்த்ரநீலம், புஷ்பராகம், முக்தா, ப்ரவாளம் முதலான அநேக விசித்திரமான ரத்னங்களால் வைத்து இழைக் கப்பட்ட திவ்யமானஹாரங்களை அங்காங்கு கொண்டுபோய் வ்யா பாரம் செய்ய எண்ணி, தேச யாத்திரை செய்து வந்தான். நகரங் களிலும், க்ராமங்களிலும் சென்று அந்த வைச்யன் அந்தஹாரங்களை விற்பனைக்கு கூவினபோது, அந்தந்த ப்ரதேசங்களிலுள்ள ஸ்த்ரீ களும் புருஷர்களும் அந்தஹாரத்தைப் பார்த்து கோடிஸூர்யனைப் போல் ப்ரகாசிக்கும் அந்தஹாரத்தின் ஒளியைக்கண்டு மஹிழ்ந்து அந்தஹாரத்தை வாங்கி, தன்தன் மார்புகளில் அணிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன், அந்த வ்யாபாரியான வைச்யனைக் கூப்பிட்டு, ஹாரத்தின் விலையைக் கேட்டார்கள். அந்த வ்யா பாரியோ, ரூபாய் லக்ஷத்திலிருந்து மேல் மேல் உயர்ந்த விலையாகச் சொல்லி அந்த ஹாரங்களைக் காண்பித்தான். லக்ஷரூபாய்க்கு குறைந்த ஹாரமே அந்த வ்யாபாரியிடமில்லை. ப்ராணிகளுக்கோ அவ்வளவு உயர்ந்தவிலை கொடுக்கும்படியாக அர்த்தமும் (பணம்) இல்லை. இவ்விதம் பொருளில்லாத காரணத்தினால், ப்ராணிகளா லும் அந்த ஹாரம் வாங்க முடியவில்லை. அந்த வைச்யனுக்கும் ஒரு ப்ரதேசத்திலும் ஒரு ஹாரங்கூட விற்பனையாகவில்லை. இதனால் இருவர்களுக்கும் பெரிய கவலை நேரிட்டது. ப்ராணிகளுக்கோ ஹாரத்தைப் பார்த்தவுடன் மனமஹிழ்ந்தாலும் பணமில்லாத காரணத்தினால், அந்த ஹாரத்தை வாங்கி யணிந்து கொள்ள முடிய வில்லையே என்ற கவலை மேலிட்டது. வ்யாபாரிக்கோ நம்முடைய ஸொத்து வீணாகப்போய்விட்டதே, இவ்வளவு தூரம் அலைந்துகூட, ஒருஹாரங்கூட விலையாகவில்லையே என்ற கவலை மேலிட்டது.

இவ்விதம் இருவர்களும் கவலைப் பட்டுக்கொண்டிருக்கும்போது, வடதேசத்திலிருந்து ஒரு பெரிய கனதனவான் ஸாதுக்களுக்கு ஏரா ளமான பொருளைக் கொடுத்து புண்யத்தை ஸம்பாதித்துக்கொள்வ தற்காக, அளவில்லாத பொருளோடுகூட, அங்காங்கு க்ஷேத்ராடனம் செய்துகொண்டு, யத்ருச்சையாக இந்த ரத்ன வ்யாபாரி கடை வைத் திருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். அந்த ஊரிலுள்ள ப்ரா ணிகளுக்குள் யார் யாருக்கு இந்த ரத்ன ஹாரத்தை வாங்கி யணிந்து கொள்ள விருப்பமிருக்கிறதோ, அவரவர்களுக்கு வேண்டிய பொரு ளைக்கொடுத்து உதவிசெய்து, நீங்கள் இந்த பொருளை எனக்கு திரும்பக் கொடுக்கவேண்டிய தவச்யமில்லை. தர்மமாகவேதான் நான் கொடுத்தேன். இதற்கு அடையாளமாக, என் நினைவுமட்டும் எப் போதும் உங்களுக்கு இருந்தால் போதுமானது என்று சொன்னான். அவ்விதமே ப்ராணிகளும் அந்தந்த ஹாரங்களை யவரவர்கள் வாங்கி யணிந்துகொண்டு ஆநந்தமடைந்தார்கள். வ்யாபாரிக்கும் தன் ரத்ன ஹாரங்கள் வ்யாபாரமாயிற்றே என்று பரம ஸந்தோஷ முண்டாயிற்று. உடன் வ்யாபாரியும் தன் ஹாரங்களுக்கு விற்று முதல் செய்துவைத்த அந்த கனதனவானைக் கொண்டாடினான். ப்ராணிகளும் தங்களுக்கு பொருளுதவி செய்து ஹாரங்களை வாங்கிக்கொடுத்த அந்த கனதனவானுக்கு நன்றியறிதலை ப்ரகாசப் படுத்தி அந்த மஹானைக் கொண்டாடினார்கள். அந்த கனதனவானி டத்திலுள்ள ஔதார்யத்தைப் போல் மற்றொரு இடத்தில் பார்க்க முடியுமா? அவருடைய ஔதார்யமானது லோகத்திற்கு மிகுந்த ஆச்சர்யத்தை உண்டுபண்ணுகிறது. இவ்விதம் உதாரியான அந்த கனதனவானை என்றைக்கும் யாரும் மறக்கமுடியுமா?

இக்கதை எவ்விதமோ அதுபோலத்தான், ப்ரக்ருதத்தில், ஸர் வக்ஞனும், ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவினுடைய அம்சாவதாரமாயும், 18 மஹா புராணங்களுக்கு கர்த்தாவாயும் விளங்கிவருகிற வ்யாஸ

பகவானே ஒரு நவரத்ன ஹார வ்யாபாரியாக க்ரஹித்துக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த மஹானுபாவன் உலகத்தில் ப்ரஸித்தமான ரத்னங்களை மாலை கட்டி விற்பனை செய்கிற வ்யாபாரியல்ல. உபநிஷத்துக்கள் என்று பொதுவான பெயருள்ள அலௌகிகமான திவ்யமான யுவதிகளை ஜீவன்முக்தர்களான மஹான்கள் அறிந்திருக்கக்கூடும். அந்த ஸ்த்ரீகள் பரதேவதைகள்தான் என்றே கருதவேண்டும். அந்த புண்யவதிகளுடைய ஸ்வரூபத்தையோ, திருநாமங்களையோ நினைத்த மாத்திரத்திலேயே ஸர்வ ப்ராணிகளுக்கும் அவர்கள் எல்லாவித புருஷார்த்தங்களையும் அளிக்க வல்லமையுடையவர்களே. உபநிஷத்துக்கள் என்று அவர்களுக்கு பெயர் ஏற்பட்டதை கவனித்தாலே அவர்களுடைய பெருமை எப்பேர்ப்பட்டதென்று யாவருக்கும் வெளியாகும்.

"षद्लृ विशरण गत्यवसानेषु"

என்ற தாதுவை (பகுதியை) ப்ரமாணமாக கவனித்தால், "ஷதில்" என்ற பதத்திற்கு க்ருசமாகப்போகும் தன்மை, "அவஸானம்" முடிவு, "கதி" (ப்ராப்தி) அடைவது என்ற அர்த்தம் வெளியாகிறது. தன்னை ஆராதித்த மனிதனுக்கு ஜன்மமரண ரூபமான ஸம்ஸாரம் என்ற பெரிய கொடூரமாயும், அனாதிகாலமாகத் தொடர்ந்துவருவதுமான மஹா ஆமயத்தை (பெரிய வியாதியை) சீக்ரத்தில் க்ருசமாக்கி, க்ரமமாக அதிசீக்ரத்தில் அதற்கு முடிவையும் உண்டுபண்ணி (நசிக்கச்செய்து), ஆநந்தவடிவான பரப்ரம்மத்தை ஸ்வரூபமாக உடைய மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தத்தை அதி சீக்ரமாக அடையும்படி அருள்செய்கிற பரதேவதையானதினால், முன்சொல்லிய திவ்ய யுவதிகளுக்கு உபநிஷத்துக்கள் என்று பெயர் ஏற்பட்டது. அவ்விதம் மஹிமை தங்கிய, ஸர்வப்ராணிகளாலும் பூஜிக்கப்பட்ட திருவடிகளோடுகூடிய, திவ்ய யுவதிகளுக்கோ, ப்ரத்

யக்ஷம் முதலான ப்ரமாணாந்தரங்களால், அறியமுடியாததாயும், பூதம் (சென்றது), வர்த்தமானம் (நிகழ்), பவிஷ்யத் (வரும்), என்ற மூன்று காலங்களிலோ, பாரமார்த்திகம், வ்யாவஹாரிகம், ப்ராதி பாஸிகம் என்ற மூன்று தசைகளிலோ, இல்லை என்று தள்ளிவிட முடியாததாயும், எல்லா தேசங்களிலும் வ்யாபகமாய் விளங்கிவரும் காரணத்தால் தேசபரிச்சேதமற்றதாயும், ஸர்வப்ராணிகளுடைய சரீரத்திலும் அந்தராத்மாவாயும், ஸஜாதீயபேதம், விஜாதீயபேதம், ஸ்வகதபேதம் என்ற மூன்றுவித பேதங்களையும் அறுத்துத் தள் ளியதாயும், ஆநந்தமாயும், அகண்டமாயும், பரஞ்ஜ்யோதிஸ்ஸாயும், நான், நீ, என்ற வேற்றுமையில்லாததாயும், நான் என்று ஸர்வ ப்ராணிகளாலும் ஸந்தேஹமன்னியில் அனுபவிக்கப்படுகிறதாயு முள்ள பரப்ரம்மமாகிய பரம்பொருளினிடத்தில்தான் அந்தரங்க மான விச்வாஸம் இருக்கிறது என்பதை வெளியில் ப்ரகாசப்படுத்து கிற, அதாவது அந்த உண்மையை நன்றாக நிர்ணயஞ்செய்துகொடுக் கிற யுக்திகளே, அதாவது ந்யாயங்களே, (அனுமானங்களே) அதா வது தர்க்கங்களே, தார்ஷ்டாந்திகத்தில் நவரத்னங்களாக ஆகும். அந்த நவரத்னங்களோ இவ்வளவுதான் என்று யாராலேயும் கணக்கிட முடியாது.

அப்படி கணக்கிடமுடியாமல், கூட்டங்கூட்டங்களாக விளங்கி வருகிற ந்யாயங்களாகிற ரத்னங்களை, மேற்சொன்னபடி ஸர்வ விதங்களிலும், மேன்மைதங்கிய வ்யாஸாசார்யாளான, ரத்னஹார வ்யாபாரியானவர் தன்னாலியற்றப்பட்ட "शारीरकमीमांसा शास्त्रम्" என்ற தங்கச்சரட்டில் அழகாக, வரிசை வரிசையாய்க்கோர்த்து இழைத்து, அந்த ரத்னஹாரங்களைத்தான், ஸ்வயமாகவே அங்காங்கு ப்ரகாசப் படுத்தினார்.

அந்த தங்கச்சரட்டிற்கு "சாரீரகமீமாம்ஸா சாஸ்த்ரம்" என்று

பெயர் வந்ததின் காரணத்தையும் அறியவும். சரீரம் என்றுதான் சாரீரம் என்ற பதத்திற்கும் அர்த்தம்; க என்ற எழுத்துக்கு நிந்தை என்று அர்த்தம்; ஸர்வ ப்ராணிகளிடத்திலும் அந்தராத்மாவாயுள்ள சைதன்யமானது மூத்ர புரீஷாதாரமான இந்த சரீரத்தில், நான் என்ற "அஹந்தை"யையும், என்னுடையது என்ற "மமதை"யையும் வைத்தகாரணத்தினலே, பரிபூர்ணனகத்தானிருந்தும், அல்பனும், கிஞ்சித்க்ஞனகவும், கர்த்தாவாயும், போக்தாவாயும், ஸம்ஸாரியாயும், அதனல் ஜீவன் என்று பெயருள்ளவனகவும் ஆகிவிட்டான். அதனல் "சாரீரகன்" என்றுல் ஜீவாத்மா என்று அர்த்தம். "மீமாம்ஸா" என்ற பதத்திற்கு விசாரணை என்று அர்த்தம் அறியவும். இந்த ஜீவனை, இவன் ப்ரம்மமா, அல்லது ப்ரம்மத்தைக்காட்டிலும் வேறு என்று உண்மையில் அறிவதற்காக ஏற்பட்ட சாஸ்த்ரமானதினல். அதற்கு "சாரீரக மீமாம்ஸா சாஸ்த்ரம்" என்று காரணப்பெயராகவே ஏற்பட்டுவிட்டது.

"अथातो ब्रह्मजिज्ञासा" "அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா" என்பது முதலான ஸூத்ரங்களேதான் அந்த சாஸ்த்ரமாக ஆகும். அதைத்தான் தார்ஷ்டாந்திகத்தில் தங்கச்சரடாக முமுக்ஷுக்கள் பாவிக்கவேண்டும். அந்த சரட்டில்தான் ந்யாயங்களாகிற ரத்னங்களை வரிசையாகக்கோர்த்து வ்யாஸாசார்யாளான ரத்னவ்யாபாரி வெளியில் அந்த ரத்னஹாரத்தை ப்ரகாசப்படுத்தினர். அந்த நவரத்னமாலையை யார் வாங்கி அணிந்துகொள்கிருர்களோ அவர்களுக்கு, முன்சொன்ன மஹிமையுள்ள உபநிஷத்துக்களாகிய திவ்ய யுவதிகளுடைய அருளும், அந்த யுவதிகளுக்கு பரப்ரம்மத்தினிடத்தில்தான் அந்தரங்க விச்வாஸம் என்பதும், அந்த ப்ரம்மம், இந்த "சாரீரகன்" என்று சொல்லப்பட்ட ஜீவன்தான் என்பதும், ஸுலப

மாகப் புலப்பட்டு, "அத்வைதாம்ருதம்" என்ற திவ்ய ரஸாயனத்தையும் தான் பானம்செய்யும்படியான பாக்யமும் நேர்ந்து, மோக்ஷஸாம்ராஜ்ய ராஜ்யத்தில் ஏகச்சக்ராதிபதியாகத்தான் செங்கோல்பிடித்து பரிபாலனம் செய்யும்படியான மேன்மை ஏற்பட்டுவிடும். இவ்விதம் தனக்கு மேன்மையைக்கொடுத்ததும் மேற்சொன்ன ந்யாயங்களாகிற ரத்னங்களேதானாகும். ஆகையால் இவ்வளவு ஸௌபாக்யத்தைக் கொடுக்கக்கூடிய ரத்னஹாரங்களை எல்லாரும் வாங்கி அணிந்து கொள்வார்கள் என்று எண்ணி வ்யாஸாசார்யாள் கருணைகூர்ந்து அங்காங்கு ப்ரசுரம் செய்தார்.

ஆகிலும் ப்ராக்ருத ஜனங்களாகிற தரித்ரர்களுக்கு இந்த நவரத்னஹாரத்தை வாங்குவதற்கு சக்தியில்லாதபோனாலும் "வ்யாகரணம், தர்க்கம், பூர்வமீமாம்ஸா" முதலான சாஸ்த்ரங்களைக் கரைத்துக்குடித்து அவைகளில் பாண்டித்யமென்ற அளவற்ற பொருளோடு கூடிய பண்டிதஸார்வபௌமாளுக்கு இந்த நவரத்னஹாரத்தை வாங்கி அணிந்துகொள்ளமுடியுமோ என்று அந்த வ்யாபாரி நினைத்தும் அதுவும் ஸாத்யமாக ஆகவில்லை. அந்த பண்டிதர்களுக்கும் இந்த மஹிமைதங்கிய நவரத்னஹாரத்தை வாங்கியணிந்துகொள்ளும்படியான அர்த்தம் கிடைக்கவில்லை. பாபம்! என்னசெய்வார்கள். அதாவது அந்த பண்டிதர்களுக்கும் வ்யாஸாசார்யாளியற்றிய ஸூத்ரங்களுக்கு என்னபொருள் என்றதைக்கண்டறிய சக்தியில்லை. ஆனால் அதைத்தெரிந்துகொண்டு அந்த நவரத்னமாலையைத் தான் வாங்கியணிந்துகொள்ளவேண்டும் என்ற பச்சாத்தாபம்மட்டும் இருந்தது. அப்படியே வ்யாஸாசார்யாளுக்கும் தான் இயற்றிய ஸூத்ரங்களுக்கு இன்னதுதான்பொருள் என்று இந்த பண்டிதர்களுக்கும் தெரியவில்லையே. இதன் பொருளை தெளிவாக விளக்கிக் காட்டி, இந்த பண்டிதர்களையும் ஸந்தோஷிக்கும்படி செய்ய எந்த

மஹானுபாவன் அவதரிக்கப்போகிருனே என்று பச்சாத்தாபம் அதிகமாக இருந்தது.

இந்த ஸந்தர்ப்பத்திலேதான், மஹாகைலாஸத்திற்கு அதிபதியான பரமேச்வரன் முன் சொல்லியபடி காலடி க்ஷேத்ரத்தில், சிவகுரு, ஆர்யாம்பாள் என்ற திவ்யதம்பதிகளுக்கு திருக்குமாரனுக அவதரித்து "குருபூமண்டலாசார்யனுகவும் விளங்கிவந்து, வ்யாஸாசார்யாளாலியற்றப்பட்ட ஒவ்வொரு ஸூத்ரத்திலும் அடங்கிய ஒவ்வொரு உபநிஷத் வாக்யங்களை, இன்னென்னதென்று தெளிவாகப்ரகாசப்படுத்தி அந்தந்த உபநிஷத்துக்களிலும் இன்ன உபநிஷத்துக்களுக்கு ஸாக்ஷாத் நிர்க்குணப்ரம்மத்தினிடத்தில் அந்தரங்க விச்வாஸம் என்பதையும், ஸகுணப்ரம்மமூலமாக பரம்பரையாக இன்னென்ன உபநிஷத்துக்களுக்கு, நிர்க்குணப்ரம்மத்தினிடத்தில் அந்தரங்கவிச்வாஸம் என்பதையும், அவ்விதம் கண்டுபிடிப்பதற்குக்காரணமான ந்யாயங்களாகிற ரத்ன ஸமூஹங்களையும் ப்ரகாசப்படுத்துகிற தன்னுலியற்றப்பட்ட "ப்ரஸன்னகம்பீரபாஷ்ய" மாகிற, குபேரன் மூலமாக ஸகலப்ராணிகளும் அப்பேர்ப்பட்ட நவரத்ன ஹாரத்தை வாங்கி அணிந்து கொள்வதற்கு வேண்டிய பொருளைக் கொடுத்து பண்டிதஸார்வபௌமர்களையும் அவ்விதமே ஆனந்திக்கச்செய்து, வ்யாஸாசார்யாளையும் க்ருதார்த்தனுகச் செய்து வைத்து, தனது பரமௌதார்யத்தை வெளியில் ப்ரகாசப்படுத்தினுர். அவ்விதமான "சங்கர பகவத்பாதாளுக்கு" ஸமானமான தைவமும் உலகில் வேறென்றுண்டோ? அந்த மஹாப்ரபுவை, அவர்கள் அவதரித்த தினத்தன்றுவது, கொண்டாடாத மனிதர்கள், மனிதர்களாக ஆகவே மாட்டார்கள் என்பது திண்ணம். இவ்விதமான மஹாபெருமை தங்கிய மஹா புருஷன் முன்சொன்ன சுப முஹூர்த்தத்தில் ஆர்யாம்பாளிடத்தில் திருக்குமாரனுக அவத

ரித்து லோகத்தை பாவனம் செய்தார். இந்த அபிப்ராயத்தை ஒட்டித்தான், இந்த மஹாப்ரபுவினுடைய அவதார ஸமயத்தில்' வ்யாஸாசார்யாளுடைய மனதாகிற தாமரைமொட்டும் மலர்ந்து விகஸித்தது என்று ஸ்ரீவித்யாரண்யாளியற்றிய "மாதவீய சங்கர விஜயத்தில்"

"व्यासस्य चित्तकमलं विकचीवभूव"

"வ்யாஸஸ்ய சித்தகமலம் விகசீபபூவ"

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடரும்)



ஸ்ரீமத் ராமாயணம்.

முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.



மஹர்ஷியான விச்வாமித்ரருடைய ஆக்ஞையை யனுஸரித்து ஸ்ரீ ராமபிரான் ஜனக மஹாராஜாவினால் அலங்கரிக்கப்பட்ட மஹாஸபையில் சிவதனுஸ் என்ற வில்லை நாணேற்றி வளைத்தார். அந்த வில்லும் பகவானான ஸ்ரீ ராமனுடைய கைபட்ட மாத்திரத்தில் முறிந்து விழுந்துவிட்டது. அதனால் ஏற்பட்ட சப்தமானது உலக முழுவதும் பரவி ஸமஸ்த ப்ராணிகளுக்கும் பயத்தை உண்டுபண்ணிற்று.

"रामे वाहुवलं विवृण्वति धनुर्वंशे गुणारोपणं,
माभूत्केवलं आत्मना तिलकिते वंशेपि वैकर्तने।
आकृष्टं नितरां तदेव नपरं सीता मनोपि द्रुतं,
भङ्गस्तस्य नकेवलं क्षितिभुजां दोस्तम्भ दम्भस्यच॥"

"ராமே பாஹுபலம் விவ்ருண்வதி தனுர்வம்சே குணாரோபணம்
மாபூத்கேவலம் ஆத்மநா திலகிதே வம்சேபி வைகர்த்தநே।
ஆக்ருஷ்டம் நிதராம் ததேவநபரம் ஸீதாமனோபி த்ருதம்
பங்கஸ்தஸ்ய ந கேவலம் க்ஷிதிபுஜாம் தோஸ்தம்ப தம்பஸ்யச॥"

ஸ்ரீ ராமபிரான் சிவதனுஸ்ஸை முறித்த வைபவத்தைக் குறித்து ராஜாதி ராஜனும், பரா சக்தியினுடைய ப்ரஸாதத்திற்கு முக்ய பாத்ரமாயும், நமது பாரத நாட்டில் முன் விளங்கி வந்த போஜ மஹாராஜாவினால் இயற்றப்பட்ட சம்பூ ராமாயணத்தில் மேற்கண்ட ச்லோகத்தைக் காணலாம். அதன் பொருளோ ஸ்ரீ ராமன் சிவ தனுஸ் என்ற வில்லில் நாண் கயிற்றை கொடுத்த காலத்தில் நாண் கயிற்றுக்கு ஸம்ஸ்க்ருத பாஷையில் "குணம்" என்றும் ஒரு பெயர் இருப்பதினால், வில்லில் மட்டும் குணத்தைச் சேர்க்கவில்லை. தான் திலகம் போல் விளங்கிவரும், தன் வம்சமாகிய ஸூர்ய வம்சத்தி லும் ஒரு பெரிய கீர்த்தியாகிற குணத்தையும் நாட்டினார். அதாவது இந்த சிவதனுஸ் என்ற வில்லை ஸ்ரீராமன் ஸாக்ஷாத் பகவானான பரம் பொருளா யில்லாதபோனால் ஆரோபணம் செய்யமுடியாது. எப் போது இந்த ஸ்ரீராமபிரான் இந்த வில்லை நாணேற்றினாரோ, அப் போது அந்த ராமன் பரம்பொருளாகத்தானிருக்கவேண்டும். இந்த பரம் பொருளோ ஸூர்ய வம்சத்தில் திருக்குமாரனாக அவதரித்தி ருக்கிறது. அந்த ஸூர்ய வம்சத்தின் பெருமையை இன்னதுதான் என்று யாராலேயும் அளவிடமுடியுமா? அந்த வம்சமே வம்சம் என்று அங்காங்கு உலகத்தில் ஸகல ப்ராணிகளாலும் ஸூர்ய வம்ச மானது புகழ்ந்து பேசப்பட்டது.

அத்துடன் ஸ்ரீராமன் வில்லை முறிக்கவேண்டி நாணேற்றி வில்லை இழுத்தவுடன் வில்மட்டும் இழுக்கப்பட்டதென்று எண்ணக் கூடாது. ஸீதாதேவியினுடைய மனது ஸ்ரீராமனுடைய பராக்ர மத்தால் இழுக்கப்பட்டு, அந்த ராமபிரானிடத்திலேயே லயமாகி விட்டது. ப்ரம்மா, ருத்ரன் முதலான தேவர்களாலேகூட வளைக்க முடியாததான வில்லை ஸ்ரீராமபிரான் ஸுலபமாக வளைத்ததைப் பார்த்து ஸீதாதேவி இவன் மனிதனல்ல. ஸகல வேதாந்தங்களுக் கும் பொருளாகிய பரப்ரம்மந்தான். ஆகையால் இந்த மஹானுபா

வனைத்தான் நான் அவச்யம் பரிணயம் செய்துகொள்ளவேண்டும் என்று தீர்மானித்து ஸ்ரீராமனிடத்தில் லயித்த மனதுடன் கூடியிருந்தாள்.

தவிரவும், ஸ்ரீராமபிரான் வில்லை முறித்தவுடன், வில்லைமட்டும் முறித்தார் என்று நினைக்கக்கூடாது. லோகத்தில் அதிசூரர்களான ரதன், அதிரதன், மஹாரதன் என்று பட்டப்பெயர் அடைந்த மஹாராஜாதி ராஜாக்களுடைய புஜபல பராக்ரமங்களும் முறிந்துவிட்டன. அதிலும் முக்யமாக, ராவணனென்ற ராக்ஷஸராஜனுடைய இருபது கைகளாகிற ஸ்தம்பங்களினுடைய மதமும் அடங்கிவிட்டது. இவ்விதம் தன்னுடைய அப்ரதிஹதமான (எதிரில்லாத) பராக்ரமத்தால் ஏற்பட்ட தனுர்ப்பங்கம் என்ற வ்யாஜத்தினால் தன்னுடைய பரதத்வத்தை ஸ்ரீராமன் ப்ரகாசப்படுத்தியவுடன் ஜனகமஹாராஜன் தன்ப்ரதிக்ஞையும் நிறைவேறிவிட்டது. ஸ்ரீராமனே ஸாமான்ய மனிதனல்ல,ஈச்வரன்தான். ஆகையால் இந்தமஹானுபாவனுக்கு, நமது அபிமானத்தால் பெண் என்று வளர்க்கப்பட்ட ஸாக்ஷாத் ஸ்ரீதேவியான ஸீதாலக்ஷ்மீ என்ற கன்யா ரத்னத்தை பரிணயம் செய்து கொடுத்து, நமது ஜன்மாவை ஸபலமாகச் செய்து கொள்ளவேண்டுமென்று தீர்மானித்து, விச்வாமித்ர மஹர்ஷியினிடத்திலும், தன் மனோரதத்தைப் பூர்த்தி செய்து வைக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்துக்கொண்டு, ஸ்ரீ ஸீதாகல்யாணம் என்ற மஹோத்ஸவத்தைக் குறித்துச் செய்யவேண்டிய ஸமஸ்த ஏற்பாடுகளையும் செய்யும்படி ஆக்ஞாபித்தார்

உடன் தூதர்கள் மூலமாக அழைக்கப்பட்டு, ஸ்ரீராமபிரானுடைய தகப்பனாரான தசரத சக்ரவர்த்தியும் மந்திரிச்ரேஷ்டர்களாகிய வஸிஷ்டர் முதலான மஹாப்ரம்மரிஷிகளும், மற்றுமுள்ள ஸ்ரீராமனைச் சேர்ந்தபந்து ஜனங்களும், அதிவிமரிசையாக ஸேனைஸங்காஹத்

துடன், மிதிலாபுரிக்கு வந்து சேர்ந்தார்கள். கல்யாண மஹோத்ஸவ ஸம்பந்தமாக ஸகல ஸாமக்ரீகளை சேகரிப்பதின் வைபவத்தையும், விச்வகர்மாவின் மூலமாக கல்யாண மண்டப நிர்மாண வைபவத்தையும் 56 தேசங்களின் அதிபதிகளும் தன்தன் பரிவாரங்களுடன் வகுப்பு வகுப்பாக கூட்டம் கூட்டமாக மிதிலை நகரதிற்குள் வந்திரங்கும் வைபவத்தையும், ஆதிசேஷ பகவானுலே கூட வர்ணிக்க முடியாது. அப்படியிருக்கும்போது, கேவலம் மனிதர்களான நம்மால் என்ன சொல்ல முடியும். பிறகு தசரதசக்ரவர்த்தி முதலான வரனைச் சேர்ந்த (கல்யாணப் பிள்ளை) ஸம்பந்தி ஜனங்களும், ஜனகமஹாராஜாவைச் சேர்ந்த (மணப் பெண்ணைச் சேர்ந்த) ஸம்பந்தி ஜனங்களும் ஒருவருக்கொருவர் தன் தன் புரோஹிதர்கள் மூலமாக கோத்ர ப்ரவரங்களை வரிசையாக எடுத்துரைத்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் விதிவத்தான பூஜைகளாலும், அநேக வெகுமானதிகளாலும், வரவேற்புகளாலும் பரம ஸந்தோஷமடைந்து, கல்யாண மண்டபத்தில் அவரவர்களுக்கு உசிதமான ஆஸனங்களில் அமர்ந்துகொண்டிருக்கும்போது, ஆகாச மார்க்கத்தில் தேவக்கூட்டங்களெல்லாம் புஷ்ப வர்ஷம் வர்ஷிக்க, தேவதுந்துபி முதலான அநேக வாத்யங்களும் கோஷிக்க, மஹர்ஷிகளும் மனது குளிர்ந்து பரமானந்தத்துடன் அநேகவிதமாக ஆசீர்வதிக்க, இவ்விதம் மஹிமை தங்கிய ஸமயத்தில், சுப முஹூர்த்தத்தில், ராஜாதிராஜனும், மஹா பாக்ய சாலியான, மஹாசாலனையுமுள்ள ஜனகமஹாராஜன், அக்னி ஸாக்ஷிகமாகவும், மந்த்ரோதக புரஸ்ஸரமாகவும் விதிவத்தாக, தனது புத்ரியான ஸீதாதேவியை ஸ்ரீராமபிரானுக்கு கன்யாதானம் செய்தார்.

அவ்விதம் ஜனகமஹாராஜன் கன்யாதானம் செய்துவைத்த விமரிசையையும் ஸ்ரீஸீதாராம கல்யாண மஹோத்ஸவத்தின் தத்வத்தையும் ப்ரகாசிக்கச் செய்யும் ச்லோகமானது வால்மீகி ராமாய

ணத்தில் பாலகாண்டத்திலிருப்பதை யாரும் நன்றாய் அறியக்கூடும். அந்த ச்லோகத்தின் தத்வங்களைப்பற்றி விசாரிப்பதற்காக அடியிற் கண்டபடி தெளிவாக அறியவும்.

"इयं सीता ममसुता सहधर्मचरीतव।
प्रतीच्छचैनां भद्रंते पाणिगृण्हीष्वपाणिना॥"

"இயம் ஸீதா மமஸுதா ஸஹதர்மசரீதவ।
ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே பாணிம் க்ருண்ஹீஷ்வ
பாணிநா ॥"

ஸ்ரீராமனைப்பார்த்து ஜனகமஹாராஜன் தன்பெண்ணான ஸீதா தேவியைப் பாணிக்ரஹணம் செய்துகொடுக்கும் காலத்தில், சொன்ன வார்த்தையானது இந்த ச்லோகத்தால் வெளியாகிறது.

இந்த ச்லோகத்தின் பதவுரையாவது:—

(हे, राम) (ஏ,ராமா)	= ராமனே
इयं (இயம்)	= ப்ரத்யக்ஷமாக எதிரிலிருக்கும் இந்த கன்னிகையானவள்
सीता (ஸீதா)	= யக்ஞபூமியை கலப்பையினால்உழுது வரும் காலத்தில் அந்தக்கலப்பை யினுடைய முகத்தில் தென்பட்டு, அயோனிஜையாக எனக்குக் கிடைத்த ஸ்த்ரீ ரத்னம்
ममसुता (மமஸுதா)	= என்பெண் என்ற அபிமானத்தினால், மிகவும் பரியத்துடன் என்னால் வளர்க்கப்பட்டவள்
तव (தவ)	= உனக்கு
सहधर्मचरी (ஸஹதர்மசரீ)	= ஸமானமான தர்மத்தை (அதா

வது) உனக்கு எந்த தர்மத்தை அனுஷ்டிப்பதில் ருசி ஏற்படுகிறதோ, அதையும் தானும் அனுஷ்டிப்பதில் அதிகருசியுடையவளாக இருந்து வருகிறவள் (பதியை அநுசரிப்பதில் இவளுக்கீடான பெண் இல்லவே இல்லை)

एनां (ஏநாம்)	=	இந்தக் கன்னிகா ரத்னத்தை
प्रतीच्छ (ப்ரதீச்ச)	=	க்ரஹித்துக்கொள்
ते (தே)	=	உனக்கு
भद्रं (பத்ரம்)	=	எல்லாவிதத்திலும் ஸௌபாக்யம்
(भविष्यति) (பவிஷ்யதி)	=	இவள் மூலமாக ஏற்படப் போகிறது
पाणिं (பாணிம்)	=	இவளுடைய கையை
पाणिना (பாணிநா)	=	உன்னுடைய கையினால்
गृण्हीष्व (க்ருண்ணீஷ்வ)	=	பிடித்துக்கொள்

இதன் தாத்பர்யமாவது:— ஸ்ரீராமனுக்கெதிரில் ஸீதாபிராட்டியை ஜனகமஹாராஜன் நிறுத்திவைத்துக்கொண்டு, அவளுடைய பெருமையை ஸ்ரீராமனிடம் தெரிவிக்கிறார். அதாவது, "**इयम्**" என்றதினால், ஸீதையினுடைய வயதைக்காட்டுகிறார். மாத்ருகாவர்ணத்தில் அகாரம் முதலான ஸ்வரத்தில் (உயிரெழுத்து) இகாரம் என்பது மூன்றாவதெழுத்து என்று எல்லோருக்கும் ப்ரஸித்தமானது. "**य**" ய காரமானது (மெய்யெழுத்துக்களில்) யவர்க்கத்தில் முதலாவதான எழுத்தாகும். மந்த்ர சாஸ்த்ரப்ரகாரம் இரண்டு அர்த்தசந்த்ரன் சேர்ந்துதான் (**मू**) பிந்துவானதினால், அதில் இரண்டு தத்வம் அடங்கியிருக்கிறது. இதனால் அந்த மூன்றுகளையும் சேர்த்துப் பார்த்தால், (**इ**) என்பதினால் மூன்று (**य**) என்பதி

ஞல் ஒன்று (म्) என்பதினுல் இரண்டு ஆக ஆறு என்பது வெளிபா கிறது. இதனுல் ஸீதாதேவிக்கு கல்யாண காலத்தில் ஆறுவயது என்பது தீர்மானமாகிறது. இந்ததத்வத்தை வெளிப்படுத்துவதின் பொருட்டுத்தான் (इयम्) என்ற பத்தை ஸ்ரீவால்மிகி மஹர்ஷி யானவர் ப்ரயோகம் செய்திருக்கிறர். இல்லாவிட்டால், அபரோக்ஷ (ப்ரத்யக்ஷ) வாசகமான சப்தத்தை ப்ரயோகம் செய்ய வேண்டிய அபிப்ராயமிருந்தாலும், "एषा, इमा, असौ" (ஏஷா, இமா, அஸௌ) என்ற சப்தங்களை ப்ரயோகித்திருக்கலாம். அந்த பதங்களிலொன் றையும் ப்ரயோகிக்காமல் (इयम्) என்ற பதத்தை ப்ரயோகம் செய் ததில், ஸீதாதேவியின் வயதை குறித்துக் காட்டுவதற்காகத்தான் என்று ஸ்ரீவால்மீகியின் கருத்து நன்ருக வெளியாகிறது.

முன்பு "ऊनषोडशवर्षोमे" "ஊநஷோடசவர்ஷோமே" என்ற தசரத சக்ரவர்த்தியினுடைய வாக்யத்தால், ஸ்ரீராமபிரானுக்கோ 12-வது வயது நடக்கிறதென்று தெரிகிறது. இதனுல்

द्व्यष्टवर्षो ऽष्टवर्षां कन्यां उद्वहेत्"

"த்வ்யஷ்டவர்ஷோ ऽஷ்டவர்ஷாம் கன்யாம் உத்வஹேத்"

என்றது முதலான சாஸ்த்ரங்களைக் கவனித்தால், வரனுக்கு (பிள்ளைக்கு) 16 வயது ஆனுல், கன்னிகைக்கு 8 வயது இருக்கவேண் டும் என்பது வெளியாகிறபடியால், அதுபோலவே வரனுடைய வயதில் பாதிதான் கன்னிகைக்கு இருக்கவேண்டுமென்று சாஸ்த்ர ஸம்மதமானதினுல், அதையனுஸரித்து, ஸ்ரீராமபிரானுக்கு 12 வய தும், ஸீதாபிராட்டிக்கு 6 வயதுமானதினுல், ஸீதாராம கல்யாண மஹோத்ஸவமானது, சாஸ்த்ரங்களுக்கும், பெரியோர்களுடைய ஆசாரத்திற்கும், ரொம்பவும் ஒத்திருக்கிறதென்பது நன்குவெளி யாகிறது. இத்துடன்,

"अष्टवर्षा भवेत्कन्या नववर्षातु रोहिणी।
दशवर्षा भवेद्गौरी अत ऊर्ध्वं रजस्वला॥"

"அஷ்டவர்ஷா பவேத்கந்யா நவவர்ஷாது ரோஹிணீ।
தசவர்ஷாபவேத் கௌரீ அத ஊர்த்வம் ரஜஸ்வலா॥"

என்றசாஸ்த்ரப்ரகாரம், 8 வயது வரையிலும்தான் ஸ்த்ரீகளுக்கு கன்னிகை யென்று பெயரானதினால், 6-வது வயதில் ஸீதைக்கு நடக்கும் கல்யாணம்தான் கன்யா பிதாவான ஜனக மஹாராஜனுக்கு கன்யா தான பலத்தை அளிக்கும் என்றும் தெரிகிறது. ஸ்த்ரீகளுக்கு 9, 10-வது வயதில் கன்யாத்வம் என்ற தர்மமானது முக்யமாக விளங்காது. கௌணமாக வேண்டுமானால் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். 10 வயதுக்கு மேல் ஸ்த்ரீகளுக்கு ஏற்படும் கல்யாணம் கன்யா பிதாவுக்கு கன்யாதான பலத்தைக்கொடுக்காது என்பது திண்ணம். 10 வயதுக்கு மேல் ஸ்த்ரீகளை ரஜஸ்வலை என்றே சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அந்த கன்யாப் பெண் ரஜஸ்வலையாகாத போனாலும், 10 வயது வந்தவுடன் ரஜஸ்வலையாகக்கூடிய தன்மை வந்து விடுவதினால், ரஜஸ்வலையை பாவிப்பது போலவே அவளையும் பாவிக்கவேண்டும்.

"माताचैव पिताचैव, जयेष्ठोभ्राता तथैवच।
त्रयस्ते नरकंयान्ति दृष्ट्वाकन्यां रजस्वलां॥"
उद्वहेद्यस्तु तां कन्यां ब्राह्मणो मदमोहितः।
असंभाष्यो ह्यपाङ्क्तेयः
सविप्रो वृषलीपतिः॥

"மாதாசைவ பிதாசைவ ஜ்யேஷ்டோப்ராதா ததைவச।
த்ரயஸ்தே நரகம் யாந்தி த்ருஷ்ட்வா கந்யாம் ரஜஸ்வலாம்॥
உத்வஹேத்யஸ்து தாம் கந்யாம் ப்ராம்மணோ மதமோஹித:।
அஸம்பாஷ்யோ ஹ்யபாங்க்தேய: ஸவிப்ரோவ்ருஷலீபதி:॥

என்ற சாஸ்த்ரத்தினுல், 10 வயதுக்கு மேல்பட்ட ஸ்த்ரீகளுக்கு விவாஹம் ஆகாதிருந்தால், அந்த ஸ்த்ரீயின் தாய், தந்தை, தமயனுக்கும், அந்த ஸ்த்ரீயை கல்யாணம் செய்து கொள்ளும் புருஷனுக்கும் மஹத்தான தோஷத்தைச் சொல்லியிருப்பதாலும், रजस्वलां ரஜஸ்வலாம் என்ற சப்தத்திற்கு

"रजस्वलांवा" "रजस्वलायोग्यत्वविशिष्टांवा"
"ईषद्दशाधिकवयस्कां इतियावत्"

"ரஜஸ்வலாம்வா" ரஜஸ்வலாயோக்யத்வவிசிஷ்டாம்வா"
ஈஷத்தசாதிகவயஸ்காமிதி யாவத்"

என்று ரஜஸ்வலாம் என்ற பதத்திற்கு பெரியோர்கள் வ்யாக்யானம் செய்திருக்கிறபடியாலும், 10 வயதுக்கு மேல்பட்ட ஸ்த்ரீகளுக்கு கல்யாணமாகாமலிருந்தால், அவ்வளவு சுத்தி போதாதது தான். அவர்களுடைய கல்யாணத்தை சாஸ்த்ர ஸம்மதமாகச் செய்வதும், சாஸ்த்ரத்தை நம்பினவர்களுக்குக் கஷ்டந்தான். அப்படி 10 வயதுக்குள்ளேதான், கன்யாப் பெண்களுக்கு விவாஹம் நடக்கவேண்டும் என்று சாஸ்த்ரத்தின் கருத்து என்பதற்கு ப்ரக்ருதத்திலுள்ள ஸீதாதேவியின் கன்னிகாதானமே அத்தாக்ஷியாகும்.

தவிரவும், விவாஹம் என்று சொல்லப்பட்ட கல்யாணத்திற்கு பலன் இரண்டு. (1) தர்மாசரணம். (2) போகாநுபவம். இரண்டாவது பலனுன போகமே எவர்களுக்கு முக்யமாகத் தோன்றுகிறதோ அவர்களைப்பற்றி சாஸ்த்ரங்களுக்கே சாஸிக்கும்படியான சக்தி கிடையாதென்பது திண்ணம்.

"सदृशं चेष्टते स्वस्याः प्रकृतेर्ज्ञानवानपि ।
प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किंकरिष्यति ॥"

ஸத்ருசம் சேஷ்டதேஸ்வஸ்யா: ப்ரக்ருதே: ஞானவாநபி ।
ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹ: கிம்கரிஷ்யதி ॥

என்ற பகவத்கீதா வசனத்தினால், அவரவர்கள் பூர்வ வாஸனை யே யனுஸரித்து நடப்பவர்களானதினால், பூர்வ வாஸனையை மீறி மற்றொரு மார்க்கத்தில் நடக்கும்படி செய்ய, பகவானுக்கே சக்தி யில்லை யென்று பகவானே சொல்லியிருப்பதினாலும், போகத்தை ப்ரதானமாக நினைக்கும் ப்ராணிகளிடம் சாஸ்த்ரம் எவ்விதம் அண்டும். அண்டித்தான் என்ன ப்ரயோஜனம். அவர்களுக்கு விதி நிஷேத ரூபமான சாஸ்த்ரத்தில் அதிகாரமும் இல்லை. அந்த ப்ராணிகளுடைய புத்தியை அனுஸரித்துப் பார்த்தால், வயது முதிர்ந்த ஸ்த்ரீகளே போகானுபவத்திற்கு யோக்யமானவர்களானதினால் வயது முதிர்ந்த பிறகுதான், ஸ்த்ரீகளுக்கு விவாஹம் உசிதமாகும். அதை யாராலும் தடுக்கவும் முடியாது. 8 வயதிலும், 7 வயதிலும் சிறு குழந்தைகளைக் கல்யாணம் செய்துதான் அவர்களுக்கு என்ன ஸுகம் ஏற்படப் போகிறது. அவர்களுக்கு போகானுபவம்தான் ப்ரதானம் என்று முன்பு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய விஷயமாக ஆஸ்திகர்களுக்கு யாதொரு விசாரமும் வேண்டிய தில்லை. இவர்களுடைய விசாரத்தில் அவர்கள் கலந்துகொள்ளவும் போகிறதில்லை.

விவாஹம் என்ற கல்யாணத்திற்கு தர்மாசரணம் என்ற பலனை முக்யமாக நினைக்கிறவர்களுக்கோ, போகம் ப்ரதானமான பலனல்ல. அதற்காக போகம் நிஷித்தமானதல்ல. தர்மாசரணத்திற்கு விரோத மில்லாமல் போகமும் சாஸ்த்ர ஸம்மதம்தான்.

"धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ"

"தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப"

என்ற பகவத்கீதா வசனத்தை யனுஸரித்து, தர்மாசரணத் திற்கு விரோதமில்லாத காலத்தில், போகானுபவத்தை யாராவது தடுக்கமுடியுமா? ஆகிலும் ஆஸ்திகர்களுக்கு போகானுபம் அவாந்

தர பலன்தான், தர்மாசரணம்தான் மஹாபலன். அப்படியிருக்கும் போது, தர்மம் என்பது இந்த்ரியத்திற்கு கோசரமாகாத பொருளானதினால்,

"चोदनालक्षणो धर्मः" "சோதனலக்ஷணோ தர்ம:"

என்ற ந்யாயத்தை யனுஸரித்து, அந்த தர்மத்தை யறிவதில் ஆஸ்திகர்களுக்கு சாஸ்த்ரம்தான் முக்ய ப்ரமாணமாயும், கதியாயும் ஆகும். சாஸ்த்ரத்தை முக்யமாக சரணமடைந்தவர்களைத்தான் ஆஸ்திகர்களென்று சொல்லவேண்டும். அந்த சாஸ்த்ரத்தைக் கொண்டுதான் தர்ம தத்வத்தை எப்படித் தெரிந்து கொள்ளவேண்டுமோ, அதுபோல் அந்த தர்மத்தை ஆசரிப்பதற்கு அந்தரங்க ஸாதனமாகிய ஸ்த்ரீயை நாம் பரிக்ரஹம் செய்துகொள்வதான விவாஹம் என்ற கல்யாணத்திற்கும் அந்த சாஸ்த்ரமானது எந்த காலத்தை குறிப்பிடுகிறதோ, அந்த காலத்தைத்தான் நாம் முக்யமான காலமாகக் கருதி, அந்தக் கார்யத்தை நடத்த வேண்டுமே தவிர, நமது இஷ்டப்படி சாஸ்த்ரத்திற்கு விரோதமாக ஒரு காலத்தைக் கல்பித்துக் கொண்டால், சாஸ்த்ரங்களையே முக்யமாக சரணமடைந்தவர்களான ஆஸ்திகர்களுடைய கோடியில் நாம் என்னமாக சேர முடியும்? ஆஸ்திகர்களுடைய கோடியில் ப்ரதானமான மனிதர்களைப் போல் நம்மை நாமாகவே பாவித்துக்கொண்டு, புராதனமான ஆசாரத்தையும், மஹர்ஷிகளுடைய ஸித்தாந்தத்தையும், சாஸ்த்ரத்தினுடைய மர்யாதையையும் மீறி, அதிலும் ஸமஸ்தமான தர்மங்களுக்கும் மூலபூதமான தர்மமாகிய விவாஹ தர்மத்தில் ப்ரமாணங்களை உல்லங்கனம் செய்து, நமது ஸங்கத்திலும் நமக்குத் தோன்றியபடி அநுஷ்டித்துக்கொண்டு, மற்றவர்களிடத்திலும் அதை அப்படியே அநுஷ்டிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு அவ்விதம் நடிப்பதைக்காட்டிலும், முன் சொன்னபடி விவாஹமாகிய கல்யாணத்திற்கு

போகத்தையே முக்யமான பலனாகக் கருதுகிற போக ரஸிகாளாயும், அதர்மரஸிகாளாயுமுள்ள மஹா புருஷர்களுடைய கோடியிலேயே நாமும் சேர்ந்துகொண்டிருந்து வருவதல்லவா நலமாகும். வயது முதிர்ந்த பிறகா கல்யாணத்தை ஸ்த்ரீகளுக்கு சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது? இல்லை. ரொம்பவும் இளம் பர்வத்தில்தான் ஸ்த்ரீகளுக்கு கல்யாண காலத்தை சாஸ்த்ரத்தில் விதித்திருக்கிறது.

அதாவது "यावन्नलज्जिताङ्गानि योन्यादीन्यवगूहते ।
यावत्तिष्ठति गोमार्गे तावत्कन्यां विवाहयेत् ॥
யாவந்நல்ஜ்ஜிதாங்காநி யோந்யாதிந்யவகூஹதே ।
யாவத்திஷ்டதி கோமார்க்கே தாவத்கந்யாம்விவாஹயேத்॥

என்ற வசனத்தால் அந்த ஸ்த்ரீகளுக்கு புருஷனைப் பார்த்து லஜ்ஜை வந்து தன் குஹ்யஸ்தானத்தை துணியால் மறைத்துக் கொள்ள வேண்டுமென்கிற அறிவுள்ள வயது வருவதற்கு முந்தியே, ராஜவீதியில் புழுதியில் விளையாடிக்கொண்டிருக்கும் பருவத்திலேயே கல்யாணத்தைச் செய்துவிட வேண்டுமென்று காலம் நிச்சயிக்கப் படுகிறது. புருஷர்களுக்கு உபநயன ஸம்ஸ்காரம் எப்படி விதிக்கப் பட்டிருக்கிறதோ, அதுபோல் ஸ்த்ரீகளுக்கு உபநயன ஸ்தானத்தில் விவாஹ ஸம்ஸ்காரத்தை சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதினால் புருஷர்களுக்கு உபநயன காலம் எதுவோ, அது தான் ஸ்த்ரீகளுக்கு விவாஹ காலமாகும்.

"गर्भाष्टमे ब्राह्मणं उपनयीत "
"கர்ப்பாஷ்டமே ப்ராம்மணம் உபநயீத"

என்ற சாஸ்த்ரத்தினாலும்

"स्त्रीणामुपनयस्थाने
विवाहं मनुरब्रवीत् ।

तस्मात् गर्भाष्टमः श्रेष्ठः
जन्मतोवाष्टवत्सरः ॥"
(ஸ்த்ரீணாம்உபநயஸ்தாநே
விவாஹம் மனுரப்ரவீத் ।
தஸ்மாத் கர்ப்பாஷ்டம: ச்ரேஷ்ட:
ஜன்மதோ வாஷ்ட வத்ஸர: ||)

என்ற சாஸ்த்ர வசனத்தாலும் ஸ்த்ரீகளுக்கு, அதிலும வேதத்தை சரணமாக அடைந்த வைதிகர்களுடைய ஸ்த்ரீகளுக்கு முக்யமாய் கர்ப்பத்திலிருந்து எட்டாவது வயதோ, பிறப்பிலிருந்து 8-வது வயதோ, அந்தக் காலம் வரைதான் விவாஹத்திற்கு முக்ய காலம் என்று தெரிகிறது. அதற்கு முன்பே 5, 6, 7-வது வயதுகளில் பரம முக்யகாலம் என்பது ஸித்தமாகிறது.

"ऊनद्विवर्षी यानारी समूढा म्रियते यदि।
खननं नैवकर्तव्यं तस्याः संस्कारमाचरेत्"
(ஊநத்விவர்ஷா யாநாரீ ஸமூடா ம்ரியதேயதி ।
கனனம் நைவ கர்த்தவ்யம் தஸ்யா: ஸம்ஸ்காரம்ஆசரேத் ||

என்ற சாஸ்த்ரத்தால் இரண்டு வயதுக்குமுன் சிசுக்கள் மறித்தால், கனனம் செய்து அடக்கம் செய்ய வேண்டும் என்று சாஸ்த்ரத்தில் சொல்லி யிருக்கிறது. அது புருஷசிசுவோ, ஸ்த்ரீசிசுவோ, இரண்டுக்கும் ஸமானம்தான். ஆகிலும் அந்த சிசு ஸ்த்ரீயாயிருந்து அதற்கு இரண்டு வயதுக்கு முன்பாகவே விவாஹமாகி இருந்து அது மறித்தால், அதற்கு கனனம் செய்து அடக்கம் செய்வதா, அக்னி தாஹஸம்ஸ்காரம் செய்வதா, என்று ஸந்தேஹம்வர, மனுவானவர் தன்ஸ்ம்ருதியில், அந்த ஸ்த்ரீ, சிசுவானாலும் கனனம் செய்து அடக்கம் செய்யக்கூடாது, அந்த ஸ்த்ரீ விவாஹம் என்ற ஸம்ஸ்கார மடைந்த ஸ்த்ரீ, அவளுக்கு அக்னிதாஹம் என்ற ஸம்ஸ்காரம் தான்

செய்யவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறார். இதினால் ஸ்த்ரீகளுக்கு இரண்டாவது வயதிற்கு முன்புகூட புராதனகாலத்தில் ஸநாதநதர்மிகள் தன் குழந்தைகளுக்கு விவாஹம் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகையால் இளம்பருவத்தில் எட்டு வயதுக்குள் அல்லது ஏதோ, ராஷ்ட்ர க்ஷோபம் (ராஜ்ய நாசம்) முதலான பெரிய ஆபத்காலத்தில், 10 வயதுக்குள்ளாகவோ, ஸ்த்ரீகளுக்கு விவாஹம் செய்யவேண்டுமென்ற சாஸ்த்ரத்தை ஸந்தேஹமில்லாமல் கற்றுணர்ந்தவனானதினாலே, ஜனகமஹாராஜன் தனது கன்னிகையான ஸீதாதேவிக்கு ஆறுவது வயதிலேயே கல்யாணம் செய்து ஸ்ரீராமபிரானிடத்தில் விதிவத்தாக ஸீதாபிராட்டியை ஒப்புவித்தார் என்பது "इयम्" என்ற பதத்தால் விளங்குகிறது. "इयम्" என்ற பதத்தால் ஸீதாபிராட்டிக்கு கல்யாணகாலத்தில் வயது ஆறுதான் என்று வெளியாகும் விவரம் முன்னமேயே நன்றாகத் தெளிவு செய்யப்பட்டிருக்கிறது. (தொடரும்)



ஸௌந்தர்யலஹரீ

மூன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.



2-வது ச்லோகம் அம்பாளுடைய
பாத தூளியின் மஹிமை.

तनीयांसं पांसु तवचरणपङ्केरुहभवं
विरिञ्चिस्संचिन्वन् विरचयति लोकान् अविकलं ।
वहत्येनं शौरिः कथमपि सहस्रेण शिरसां
हरस्संक्षुद्यैनं भजति भसितोद्धूलन विधिम् ॥

பதவுரையாவது:—

(हे, भगवति) (ஏ, பகவதி)	= ஏ, பரதேவதையே
विरिञ्चिः (விரிஞ்சி:)	= ப்ரம்மாவானவர்
तव (தவ)	= உன்னுடைய
चरणपङ्केरुहभवं (சரணபங்கேருஹபவம்)	= தாமரைப் பூவைப்போலொத்த உன் திருபாதங்களிலிருந்து உண்டானதாயும்
तनीयांसं (தநீயாம்ஸம்)	= ரொம்பவும் ஸூக்ஷ்மமாயுமுள்ள

पांसुं (பாம்ஸூம்) = புழுதிகளை (தூளியை)

संचिन्वन् (ஸஞ்சின்வன்) = ஸாமக்ரியாகஸம்பாதிக்கிற வராய்க்கொண்டு

लोकान् (லோகாந்) = பூராதி ஸப்தலோகங்களென்ன, அதலம் முதலான ஸப்தலோ கங்களென்ன, ஆக 14 லோகங் களையும்

अविकलं (அவிகலம்) = ஒன்றுக்கொன்று நெருங்காமல் விசாலமாக இருக்கும்படி

विरचयति (விரசயதி) = ஸ்ருஷ்டிக்கிறார்

(तथा) (ததா) = அப்படியே

(हे, भगवति) = ஏ, பரதேவதையே

शौरिः (சௌரி:) = ஆதி சேஷனுடைய ரூபமாக விளங்கி வரும் விஷ்ணுவானவர்

एनं (ஏநம்) = 14 லோகங்களாகப் பிரிக்கப் பட்டுவருகிற உன்பாததூளியை

शिरसां सहस्रेण (சிரஸாம் ஸஹஸ்ரேண) = தனது 1000 (ஆயிரம்) தலைகளி லே

कथमपि (கதமபி) = ரொம்பவும் ப்ரயாஸத்துடன்

वहति (வஹதி) = தாங்கிக்கொண்டு ரக்ஷிக்கிறார்

तथा (ததா) = அப்படியே

हे, भगवति = ஏ, பரதேவதையே

हरः (ஹர:) = ப்ரளயகாலத்தில் ஸகலப்ரபஞ் சத்தையும் ஸம்ஹரிக்கிற ருத்ர ருனவர்

एनं (ஏநம்) = இந்த லோகமாக விளங்கிவரும் உன்பாததூளியை

संक्षुद्य (ஸம்க்ஷுத்ய) = நன்றாகப்பொடி செய்து

भासितोद्धूलनविधिं (பஸிதோத்தூளநவிதிம்) = விபூதியினால் செய்து கொள்ள வேண்டிய உத்தூளநம் என்ற அனுஷ்டானத்தை

भजति (பஜதி) = ஸேவிக்கிறார் (செய்கிறார்)

இந்த ச்லோகத்தால் ஸாக்ஷாத் ராஜராஜேச்வரியான பரதேவதையினுடைய திரு பாத கமலங்களில் ஸம்பந்தப்பட்ட புழுதிகளாகிற தூளியின் மஹிமையானது சொல்லப்படுகிறது. அதாவது, ஸர்வேச்வரியான ஜகன்மாதா தனது பொற்பாத கமலங்களால், தனது ஸ்ரீபுரப், என்ற நகரத்தில் உத்யான வனத்தில் ராஜ யோகிகளுடைய ஸங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட திவ்ய பூமியில், மந்தகதியாக நடந்துகொண்டு ஸகிகளுடன் ஆநந்தமாக விளையாடிக்கொண்டிருக்கும் ஸமயத்தில், சதுர்முகனான ப்ரம்மாவானவர், அந்த ஸந்தர்ப்பத்தில் அந்தப் பரதேவதையைத் தர்சனம் செய்யும்படியாக, ஒரு ஸமயம் பாக்யவானாக ஆனார். அப்படி தேவியினுடைய தர்சனத்தைச் செய்து தனது ஜன்மாவைப் பரிசுத்தமாகவும் செய்துகொண்ட பிற்பாடு அந்த அம்பாள் நடந்துவந்த ப்ரதேசத்திலுள்ள புழுதித் தூளிகளை தான் ஸ்வீகரித்துக்கொண்டு, அதினின்றும் பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், மஹர்லோகம், ஜநலோகம், தபோலோகம், ஸத்யலோகம், என்ற மேல் லோகமாகிய 7 லோகம் என்ன, அதல, விதல, ஸுதல, ரஸாதல, தலாதல, மஹாதல, பாதாள என்ற கீழ் லோகமாகிய 7 லோகம் என்ன ஆக 14 லோகங்களையும் ஸ்ருஷ்டித்து, லோகத்திற்குத் தான் ஸ்ருஷ்டிகர்த்தா என்ற மேன்மையை அடைந்தார். அதுமாத்ரமல்ல. இந்த லோ

கங்கலெல்லாம் ஸ்ரீ வித்யையின் பாததூளியின் அம்சம் என்று அறிந்து அந்த உலகத்தில் ஒரு மான்யதா புத்தியையும் வைத்து, தான் ஆதிசேஷன் என்ற ஸர்ப்ப ராஜாவின் உருவத்தையும் எடுத்துக்கொண்டு தனது ஆயிரம் தலைகளால் மேற்சொன்ன உலகங்களைத் தாங்கிக்கொண்டு ரக்ஷித்து வருகிறார். இதையறிந்த ருத்ரனே, ப்ரம்மாவுக்கும், விஷ்ணுவுக்கும், ஸ்ரீ ராஜராஜேச்வரியினுடைய பாத தூளி கிடைத்ததே, நாம் அதை அடைய பாக்யமில்லாதவனாக ஆய்விட்டோமே என்று நினைத்து, மஹா ப்ரளய காலத்தில், ஸம்ஹார க்ருத்யத்தில் நான் கர்த்தாவாக ஆகிறேன் என்று முன்னுக்கு வந்து அவ்விதமே ப்ரளய காலத்தில் , இவ்விதம் சொல்லப்பட்ட 14 லோகங்களாக விளங்கிவரும் அம்பாளுடைய பாத தூளியை நன்றாக கையிலெடுத்து வைத்துக்கொண்டு "த்ரியம்பக" மந்த்ரத்தால் பொடியாக நொறுக்கி தன் பாதம் முதல் சிரஸ் வரையிலும் தனது சரீரத்தில் தேவியினுடைய ப்ரஸாதத்தைத் தான் அடைவதற்காக, அந்த பஸ்மாவைப் பூசிக்கொண்டு, தான் க்ருதார்த்தனாகி பரதேவதையினுடைய த்யானத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதனால் ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற த்ரிமூர்த்திகளும் தேவியினுடைய பாத தூளியைப் பூஜை செய்து அதனால், தான் ஒரு ப்ராபல்யத்தையுமடைந்து, ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற தங்களுக்குரிய கார்யங்களைச் செய்து வருகிறார்களே தவிர, ஸ்வயமாக அவர்களுக்கு ஏற்பட்ட ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களாகிற அவர்களுடைய கார்யங்களில் அவர்களுக்கு சக்தியில்லையென்று தெரிகிறது. தேவதைகளுக்குக்கூட அம்பாளுடைய பாததூளியின் மஹிமையினால்தான், ஸகலவிதமான ஸௌபாக்யங்களும் ஏற்படுகிறது என்பது திண்ணம். ஸகலமான குடும்பிகளுக்கும் ஆயுராரோக்ய ஐச்வர்யாபிவ்ருத்திக்கும், சத்ருக்ஷயத்திற்கும், திவ்ய ஞானப்ராப்திக்கும், பரதேவதையினுடைய பாதாரவிந்த தூளியின் பூஜையே மேலானதும் அவச்யமென்றும் அறியவும்.

ஆனால் தேவீ நமக்கு அப்ரத்யக்ஷமாயிருக்கும்போது நமக்கு அந்த அம்பாளுடைய பாதகமலம் ஸம்பந்தப்பட்ட ப்ரதேசம் தெரிந்து, அதற்குப்பிறகு நாம் அந்த பாததூளியை அடைந்து நாம் பூஜிப்பது என்பது நமக்கு எப்படி ஸித்திக்கும் என்று எண்ணலாம். ஆகிலும் அந்த பாத தூளியை அடைவதற்கும் ஒரு ஸுலபமான உபாயம் உண்டு. அதாவது, ஏதாவது ஒரு பௌர்ணமி தினத்தன்று ஒரு ஸுவாஸிநீயை, ஸுவாஸிநீபூஜாவிதிக்ரமத்தையனுஸரித்து, நாம் பூஜிக்கவேண்டும். நமது க்ரஹத்திற்குள் அந்த ஸுவாஸிநீயை அழைக்கும்போது, நமது க்ரஹத்தின் வாசலிலிருந்து, ஸுவாஸிநீ பூஜைக்காக அமைத்திருக்கும் பீடம் வரையிலும் நதியிலுள்ள மணலைக்கொண்டுவந்து வஸ்த்ரகாயம் செய்து பூமியில் அதை வாறியிறைத்து, அதன்மேலாக அந்த ஸுவாஸிநீயினுடைய பாதங்கள் படும் படியாக அழைத்துப் போகவேண்டும். பூஜா விதிகள்முடிந்து ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் ஸுவாஸிநீயை நாம் ஆராதித்து, அவள் அந்த குடும்பத்தார்களுக்கு ஆசீர்வாதம் செய்து வெளியில் போகும் போதும் முன்போலவே அந்த மணல் பாதை வழியாகவே செல்லும்படி செய்யவேண்டும். அப்படியானால்,


"स्त्रियस्समस्ताः तव देवि भेदाः"

என்ற சாஸ்த்ரத்தை யனுஸரித்து, ஸ்த்ரீகள் தேவியினுடைய விபூதியானதினாலும், அதிலும், ப்ரக்ருதமாக, பூஜிக்கப்படும் ஸுவாஸிநீயிடத்தில், பூஜகனுக்கு தேவியினுடைய தாதாத்ம்யபாவம் இருப்பதினாலும், அந்த ஸுவாஸிநீயினுடைய பாதங்களில் ஸம்பந்தப்பட்ட மணல் தூளிகளை, ஸாக்ஷாத் பரதேவதையினுடைய பாத கமலதூளிகளாகவே பாவிக்கவேண்டும். அந்த பாத தூளிகளை ச்ரத்தையுடன் க்ரஹித்து, தன்னுடைய சக்தி அனுஸாரம் சின்னதாக செய்யப்பட்டபித்தளைப் பெட்டியிலோ, வெள்ளிப்பெட்டியிலோ, தங்கப்பெட்டியிலோ, அதை நிறைத்து வைத்துக்கொண்டு, ஒவ்

வொரு தினத்திலும் அந்த பெட்டியின்மீது, தேவியின் பாத தூளியை ஆவாஹனம்செய்து, ஷோடசோபசாராதிகளால் பூஜை செய்து வரவேண்டும். ஸ்ரீவித்யாபீஜாக்ஷரங்களினாலே, த்யானம, ஆவாஹனம் முதலான பூஜை உபசாரங்களைச்செய்வது அவச்யமாகும். வஸந்த ருதுவிலோ, அல்லது சரத்ருதுவிலோ, ஸ்ரீவித்யா ஸாதகர்கள் ஒரு மண்டலத்திற்குக் குறையாமல் இந்தப்பூஜையைச் செய்து வரவேண்டும். ஸாயங்காலமும், ப்ராதக்காலமும், இருகாலத்திலும் இந்த பூஜையை செய்துவரவேண்டும். ப்ராதக்காலத்தில் பூஜையானவுடன், "तनीयांसं पांसुं" என்ற ச்லோகத்தை ஆயிரம் ஆவர்த்திஜபமும், ஸாயங்காலபூஜை ஆனபிற்பாடு, அடுத்த ஸஞ்சிகையில் ப்ரசுரமாகப் போகிற "अविद्यानां अन्तस्तिमिरमिहिरद्वीपनगरी" என்றச்லோகத்தை ஆயிரம் ஆவர்த்திஜபமும் செய்து பூஜையை விதிவத்தாக முடிக்கவேண்டும். இவ்விதம் ஒரு மண்டலம் பூஜை செய்து பூர்த்தியானவுடன், 9 ஸுவாஸினிகளை அழைத்து ம்ருஷ்டான்னபோஜனம் செய்வித்து, வஸ்த்ரம், ஆபரணம், தக்ஷிணை, முதலானதுகளை தன் சக்திக்குக் குறையாமல் கொடுத்து, ஸந்தோஷமாக ஆராதித்தும், வ்ரதத்தை முடிக்கவேண்டியது. வ்ரததினமாகிய ஒவ்வொரு தினத்திலும் பிரம்மசர்யம் முதலான நியமங்கள் தவறாமல் இருக்கவேண்டும். அப்படியானால், அந்த பூஜகனை மஹாபுருஷன், பராம்பிகையினுடைய ப்ரஸாதத்திற்கு முக்யபாத்ரனாக ஆகி, ஸர்வவித்யாபாரங்கதனையும், அஷ்டைச்வர்யஸம்பன்னனையும், புத்ரமித்ரகளத்ராதி ஸம்பத்தியோடு கூடினவனையும், அகண்டமான கீர்த்திமாலையினால் அலங்க்ருதனையும், சிரஞ்ஜீவியாயிருந்து விளங்கிவருகிறான் என்பது திண்ணம். ஆகையால் ச்ரேயஸ்ஸை விரும்புகிற ப்ராணிகள் யாவரும் ஸ்ரீபகவத்பாதாளியற்றிய "ஸௌந்தர்யலஹரி" யிலுள்ள இந்த ரஹஸ்யத்தை யறிந்து, நன்றாக அனுஷ்டித்து, ஸகலவிதமான ஸௌபாக்யத்தையும் தேவியினுடைய ப்ரஸாதத்தினால் அடையவேண்டுமாறு, இந்த "ஸன்மார்க்க ப்ரதர்சினி" என்ற ஒருமேலாகபந்துவானவள், லோகமாதாவை எப்போதும் ப்ரார்த்தித்துக்கொண்டுவருகிறாள். (தொடரும்)

சிவோத்கர்ஷம்.

முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.



தவிரவும், மனிதர்களுக்கு, அதிலும் ப்ராம்மணர்களுக்கு ஞானத்தினால் ஏற்படும் பெருமைதான், பெருமையாகுமன்னியில், மற்ற எவ்வித ஸம்பத்தியினாலும் ஏற்படும் பெருமை, பெருமையே ஆகாது. அறிவையடைவது தான் மானிட ஜன்மாவிற்கு முக்யமான பயனாகும். விஷயங்களுடைய அனுபவத்திற்காக மானிட ஜன்மா ஏற்பட்டதல்ல. பசு, பக்ஷி, ம்ருகம், முதலான ஜன்மாக்களிலுங்கூட விஷயானுபவம் ஏற்படக்கூடும். அதற்காகவும் மானிட ஜன்மாவை அடைந்து தான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை.

"नायं देहो देहभाजां नृलोके
कष्टान् कामान् अर्हति विड्भुजां ये।"

என்ற ஸ்ரீமத்பாகவத வசனத்தினால் பன்றிகள் முதலான நிக்ருஷ்டமான (கீழ்ப்பட்ட) யோனிகளில் பிறந்திருந்தாலும், ஸ்த்ரீ முதலான விஷயஸுகங்களை அனுபவிப்பதென்பது ஸுலபமாக ஏற்படக்கூடுமானதினால் நிக்ருஷ்டமான அந்த விஷயபோகாதிகளுக்காக உத்க்ருஷ்டமான மானிட ஜன்மா ஏற்பட்டதல்ல என்றதும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. "विप्राणां ज्ञानतो ज्यैष्ठ्यं" என்ற சாஸ்த்ரத்தினாலும் ஞானம் தான் உத்கர்ஷத்திற்குக் காரணம் என்றும் வெளி

யாகிறது. அந்த ஞானமும் மோக்ஷஸாதனமான ஞானமாகத் தானிருக்கவேண்டும். **"तत्वमसि"** என்றது முதலான மஹாவாக்யத்தின் அர்த்தமாகிய, அகண்ட ப்ரத்யக்ப்ரம்ம ஐக்யவிஷயமான ஞானந்தான், மோக்ஷ ஸாதன ஞானமாக ஆகும். அந்த ஞானத்தையோ கொடுக்கும் வல்லமை பரமேச்வரன் ஒருவனுக்குத் தான் ஏற்படும். **"ज्ञानं महेश्वरात् इच्छेत्"** என்ற வசனத்தினல், பரமேச்வரனே ஞானதாதா என்பது ஸ்பஷ்டமாக வெளியாகிறது.

ஸகலமானப்ராணிகளுக்குள் மனிதர்கள் மேலானவர்கள். அந்த மனிதர்களுக்கோ உத்கர்ஷத்தைக் கொடுக்கக் கூடியது ஞானம்தான். அந்த ஞானத்தைக்கொடுக்கும் வல்லமையோ பரமேச்வரன் ஒருவனுக்குத் தான் உண்டு என்றும் சொல்லப்பட்டது. அவ்விதமிருக்கும்போது பரமசிவன்தான் உத்க்ருஷ்டமான தேவன் என்பதில் யாதொருவிதமான ஸந்தேஹம் ஏற்படந்யாயமில்லையல்லவா?

"सदाशिवसमारम्भां शङ्कराचार्यमध्यमां।
अस्मदाचार्यपर्यन्तां वन्देगुरुपरम्पराम् ॥"

என்ற வசனபலத்தால், ப்ரம்மவித்யையை லோகத்தில் ப்ரதிஷ்டை செய்துவைத்த ஆசார்ய பரம்பரையிலும், பரமசிவன்தான் மூலகுருவென்று தெரிகிறபடியால், பரமசிவனே உத்க்ருஷ்டமான தேவனுகுவார்

योब्रह्माणं विदधाति पूर्वं योवैवेदाँश्च प्रहिणोति तस्मै।
तँहदेवं आत्मवुद्धिप्रकाशं मुमुक्षुर्हवै शरणमहं प्रपद्ये ॥"

என்ற ச்ருதியினுலும் ஆதிகர்த்தாவான ஹிரண்யகர்ப்பனுக்கும் பரமேச்வரனே ஸ்ருஷ்டி கர்த்தாவாகவும், வேதம் முதலான மந்த்ர ரஹஸ்யங்களை உபதேசம் செய்தவனுகவும் சொல்லப்பட்டிருக்கிற காரணத்தைக்கொண்டு பரமசிவனுடைய ஸர்வோத்கர்ஷமானது வித்வத் ஜனங்களுக்கு நன்ருய் விளங்கும். ஆனல் அந்தச்ருதியில்

"देव:" என்ற பதம் மட்டும்தான் காணப்படுகிறது. அதை சிவபரமாகத்தான் ஏன் நயனம் செய்யவேண்டும் என்று சிலர்கள் ஆக்ஷேபிக்கலாம். அதற்கு ஸமாதானத்தையும் அடியிற்கண்டபடி அறிந்து கொள்ளவேண்டியது.

அதாவது, "योब्रह्माणं" என்ற மேற்கண்ட ச்ருதியிலுள்ள "देव:" என்றபதமானது, இந்த்ரன் முதலான தேவர்களைச் சொல்கிறதா, பரமசிவனைச் சொல்கிறதா, விஷ்ணுவைச் சொல்கிறதா என்பதை நன்ருய் விசாரிக்கவேண்டும். இந்த்ரன் முதலான தேவர்கள் ஹிரண்யகர்ப்பனுக்குப்பிந்தி, ஹிரண்யகர்ப்பனுடைய மனதினுல் ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்களாக புராணுந்தரங்களில் சொல்லப் பட்டிருப்பதாலும், ப்ரக்ருதச்ருதியிலுள்ள "देव:" என்ற பதத்தின் பொருளான தேவனை, அந்த ஹிரண்யகர்ப்பனுக்கு உபதேஷ்டாவாக சொல்லியிருக்கிறபடியினுலும், ச்ருதியிலுள்ள "देव:" என்ற பதமானது இந்த்ரன் முதலான தேவர்களைச் சொல்வதாக ஆகாது. (தொடரும்)



முக்கிய கவனிப்பு.

---

1. ஜாதிபேதம்
2. சிகையின் அவச்யம்
3. ஸம்ஸார லீலை

இந்த மூன்று விஷயங்களையும் இந்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்ய இடமில்லாததினால் அடுத்த மாத ஸஞ்சிகையில் காணலாம்.

அறிவிப்பு.

"ஸன்மார்க்க ப்ரதர்சினி" என்ற பெயருடைய ஸநாதந தர்மதேவதையாகிற கன்னிகைக்கு 1—8—34வ யோடு அப்த பூர்த்தி மஹோத்ஸவம் நடைபெருமானதால், 1—9—34 முதல் ஆரம்பிக்கப்படும் இரண்டாவது வருஷத்திற்கு சந்தாதார்களாக சேர்ந்துகொள்ள விரும்பும் ஆஸ்திகசிகாமணிகள் 1—8—34க் குள்ளாகவே ஆபீஸ் மானேஜருக்கு சந்தாத்துகையை மணியார்டர் மூலமாகவோ, நேரிலோ செலுத்திவிடவேண்டியது. அப்படி முன்னுடியே செலுத்துகிறவர்களுக்கு, இப்போது அனுஷ்டானத்திலிருந்துவரும் உள்ளூருக்கு 1—0—0 வீதமும், அயலூருக்கு 1—6—0 வீதமும் சந்தாத்துகையை அனுப்பிவிட்டால் போதுமானது. அப்படி 1—8—34க்குள்ளாகவே, அனுப்பாதவர்கள் பின்பு சந்தாதார்களாகச் சேர்ந்துகொள்ள விரும்பினல் ஆபீஸ் மானேஜருக்கு உள்ளூருக்கு ரூபாய் 1—8—0 வீதமும், அயலூருக்கு 2—0—0 வீதமும், மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்தித்தான், சந்தாதார்களாகச் சேர்ந்துகொள்ளவேண்டும்.

Reg No. M. 2970.

'ஸன்மார்க்க ப்ரதர்சினி'

மதுரை.

ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியில் வெளிவரும்.

		மதுரைக்கு	வெளியூர்களுக்கு
வருஷ சந்தா	ரூ.	1—0—0	1—6—0
6 மாத சந்தா	ரூ.	0–12—0	0–14—0
தனிப்பிரதி	ரூ.	0—2—0	

1. சந்தாத் தொகையை முன் பணமாகவே மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும்.
2. விலாஸ மாறுதல்களுக்கு, சந்தா எண்ணைக்குறித்து புதிய விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டும்.
3. கடிதப் போக்குவரத்துக்களுக்கு, பதில் வேண்டுவோர், தபால் செலவு அனுப்ப வேண்டும்.

Printed at the Rajeswari Press, Palace Road, Madura:-1934.